# இந்தியஎயார்பஸ் விமானம்விபத்துக்குள்ளானது

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 மாசி: 03 றஜபு பிறை: 18 இதழ்: 02

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-02-1990

## 100 பேர் பலி!

### பெங்களூரில் இடம்பெற்ற கோர விபத்து

(பெங்களூர்)

இந்தியன் எயர் லைன்ஸுக்கு சொந்தமான எயார்பஸ் விமானம் ஒன்று நேற்று பெங்களூர் விமான நிலையத்தில் நொறுங்கி விழுந்தது. இந்தக் கோர விபத்தில் சுமார் 100 பேர் கொல்லப்பட்டனர். 57 பேர் காயமடைந்தனர்.

பம்பாயில் இருந்து நேற்று முற்பகல் 11-30 மணிக்குப் புறப்பட்ட IC 605 என்ற மேற்படி விமானம் பெங்களூர் விமானநிலயத்தில் தரையிறங்கும்போது விமானநிலைய ஓடு பாதைக்கு அருகே இருந்த சுவரில் மோதி நொறுங்கி விழுந்தது.

இதனைத் தொடர்ந்து விமானத்தில் தீ பற்றிக்கொண்டது. தீயில் சிக்கிய பெரும்பாலான பிரயாணிகள் அதில் கருகிச் சடலங்களானார்கள்.

நேற்றுப் பகல் 1-25 மணியளவில் இக்கோர விபத்து இடம்பெற்றது. தரை இறங்கும்போதே விமானம் தீப்பிடித்து விழுந்தது. விமானம் முழுவதும் தீயில் கருகிப்போய் விட்டது.

இந்த விபத்தில் விமானத்தில் பணியாற்றிய ஐந்து பணிப் பெண்களில் இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். (பெ)

University of Jaffna Sri Lanka
RECEIVED
Library

# நாட்டின் இறைமையை குலைக்க 'றோ' முயற்சி - ரஞ்சன் குற்றச்சாட்டு

## இந்தியா அதிர்ச்சி

### கொழும்பில் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களுடன் கைது

(கொழும்பு)

**இந்தியப் புலனாய்வு நிறுவனம் ('றோ') இலங்கையின் இறைமையை குலைக்க முயற்சி செய்வதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், வெளிவிவகார அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரட்ண குற்றம்சாட்டினார்.**

நேற்று நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டில் கொழும்பு நகரில் பல தமிழர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்று தமிழ் பிரதிநிதி ஒருவர் புகார் தெரிவித்தபோது அதற்குப்பதிலளிக்கையிலேயே திரு. ரஞ்சன் இவ்வாறு தெரிவித்தார்.

புலனாய்வு அறிக்கைகள் கொடுத்த தகவல்களைக் கொண்டு குழப்பம் விளைவிக்கவிருந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சுமார் 300 பேர் வரையில் கைது செய்யப்பட்டதாகவும், இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர் என்றும் பலரிடம் ஏ. கே. 47 துப்பாக்கிகளும் வெடிகுண்டுகளும் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு இந்திய புலனாய்வுத்துறை ஆயுதங்களையும், நிதிவசதிகளையும் வழங்கியுள்ளது என்றும் அவர் மேலும் குற்றம் சாட்டினார்.

பஸ் நிலையங்களிலும் கோயில்களிலும் வைத்தே

(8ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுக்கும் ஓமானுக்கும் உள்ளூர் மருத்துவத் தாதிகள்

### விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

அமெரிக்காவிலும், ஓமானிலும் மருத்துவத்தாதிகளாக பணிபுரிய விரும்புவோரிடமிருந்து சுகாதார அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட இருநாடுகளிலும் சுமார் ஆயிரம் மருத்துவத் தாதிகளுக்கு வெற்றிடங்கள் இருப்பதாக அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்தே சுகாதார அமைச்சு அந்த வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களைக் கோரியிருக்கின்றது.

விண்ணப்பம் செய்வோர் அடிப்படைத் தகுதியாக மூன்று வருடகாலம் பொது

(8ம் பக்கம் பார்க்க)

## ஒற்றுமை கருதி சீர்திருத்த திட்டங்கள் அமுலாக்கப்படும்

### — ஜனாதிபதி

(கொழும்பு)

''அரசைக் கவிழ்க்கவும், நாட்டைப் பிளவுபடுத்தவும் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு முடிவுகட்டும் நோக்குடன் கூடிய சீர்திருத்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம்'' என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

இளைஞர்கள் அமைதியின்மை பற்றிய ஜனாதிபதி ஆணைக் குழுவின் சிபார்சுகளை ஆராய்வதற்காக நேற்று ஜனாதிபதி செயலக மண்டபத்தில் நடைபெற்ற சர்வகட்சி

(8ம் பக்கம் பார்க்க)

## "போராளிகளின் நினைவுத்தூபிகள் ஆராதிக்கவேண்டிய சின்னங்கள்"

### - ஆஞ்சநேயர் உரை

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ மண்ணின் மீட்சிக்காக உயிர் நீத்த போராளிகளுக்கு நினைவுத் தூபிகள் அழுவதற்காக அமைக்கப்படவில்லை. அவை ஆராதிக்க வேண்டிய வரலாற்றுச் சின்னங்கள்.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்க வலிகாமம் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற கைதடியில் இடம்பெற்ற வெடிகுண்டு விபத்தில் பலியான போராளிகளின் 3-வது வருட நினைவு தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் திரு. ஆஞ்சநேயர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவப் பலம் கொண்ட அரசியல் சக்தியாக உருவாகி, சர்வதேச மக்களின் நன்மதிப்பைப்

(8ம் பக்கம் பார்க்க)

## இன்று புலிகள் தூதுக்குழு சென்னை பயணம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளான திரு. அன்ரன் பாலசிங்கமும் திரு. யோகியும் இன்று சென்னை புறப்படுவார்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

## மூதூரிலிருந்து அமைதிப் படை வெளியேறியது

(திருமலை)

திருமலை மாவட்டத்திலிருந்து இந்திய அமைதிப்படையினர் நேற்றுமுதல் வாபஸ் பெறத் தொடங்கியுள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு சென்ற 'யாழ்தேவி' என்ஜின் தீப்பிடித்தது; பயணிகள் யாழ். திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து நேற்றுக்காலை கொழும்பு புறப்பட்ட 'யாழ்தேவி' கடுகதி ரயில் பரந்தனுக்கும் கிளிநொச்சிக்குமிடையில் எஞ்ஜினில் தீப்பற்றியதால் எஞ்ஜின் பலத்த சேதத்திற்குள்ளாகியது.

எஞ்ஜினில் பொருத்தப்பட்டிருந்த எண்ணை தாங்கிகளில் கசிவு ஏற்பட்டதினால்தான் எஞ்ஜினில் தீப்பற்றியதாகக் கூறப்படுகிறது.

தீயை ரயில்வே ஊழியர்களும், பிரயாணிகளும் அணைத்தபோதும் எஞ்ஜினுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

எஞ்ஜினிலிருந்து சிறிப்பாய்ந்த 'ஒயில்' முதல் மூன்று பெட்டிகளிலும் பிரயாணம்செய்த பிரயாணிகளின் ஆடைகளை அசுத்தப்படுத்தியதாகவும் தெரியவருகிறது.

இதனையடுத்து பல பிரயாணிகள் தமது பயணத்தை இடையில் நிறுத்திக்கொண்டு [illegible]

[illegible] எஞ்ஜினுக்கு ஏற்பட்ட சேதம்பற்றி யாழ். புகையிரத நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதும் இங்கிருந்து சரக்கு ரயில் எஞ்ஜின் ஒன்று விபத்து நடந்த இடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி ரயிலை மாங்குளம்வரை தள்ளிச்சென்றுவிட்டு மாலை 6 மணியளவில் மீண்டும் யாழ். புகையிரதநிலையம் வந்தடைந்தது.

அநுராதபுரத்திலிருந்து வந்த பிரத்தியேக எஞ்ஜின் ஒன்று 'யாழ்தேவி' ரயிலை கொழும்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாடசாலை உபகரணங்கள் சகலவிதமான அப்பியாசக் கொப்பிகள், இலங்கை இந்திய சஞ்சிகைகள், பத்திரிகைகள், திருமண பிறந்தநாள் மடல்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். எந்நேரமும் போட்டோஸ்ரட் செய்து கொள்ளலாம். மக்மிலன் புத்தகசாலை, 03, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (சி-535)

எம்மிடம் சகலவிதமான மணிக்கூடுகள், ரெலிவிஷன்கள், காஸ்குக்கர்கள், மின் விசிறிகள், மின்னியல் உபகரணங்கள், சகலவிதமான ரி வி உப உறுப்புக்கள் விற்பனைக்குண்டு. நியு சிற்றி ரேடர்ஸ், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி 536)

சகலவிதமான அப்பியாசக் கொப்பிகள், இலங்கை, இந்திய நூல்கள், திருமண கார்ட்டுகள், பிறந்ததின, திருமண வாழ்த்துக்கள், பாடசாலை உபகரணங்கள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம். போட்டோஸ்ரட் பிரதிகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்: ஶ்ரீகாந்த் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ 544)

### சேவை

சகலவிலமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கும் ஒரே ஸ்தாபனம், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களை பொருத்தி திருத்திக் கொடுக்கின்றோம். டில்கா வோச் வேக்ஸ்(பஸ்நிலையம் முன்பாக) 404 1/1 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (ஏ 545)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## Wanted

RECEPTIONIST

Wanted a lady receptionist for an establishment in Jaffna with a knowledge of Typing in English & Tamil. Conversant in English preferred.

Apply with Bio data before 23-2-90.

Advt. No. 538, C/o Eelanadu, P. O. Box 49. Jaffna.

(C 538)


## தினவரவு இடாப்புகள் வழங்கப்படவில்லை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகள் பலவற்றிற்குத் தினவரவு இடாப்புகள் வழங்கப்படாமையால் ஆசிரியர்கள் இதுவரை மாணவர்களது தினவரவை 'புல்ஸ்காப்' பேப்பரிலேயே பதிந்து வருகின்றனர்.

இந்நிலை தொடருமானால் பெரும் சிரமமாக இருக்குமென ஆசிரியர்கள் தெரிவிப்பதோடு உடனடியாகத் தினவரவு இடாப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிபர்கள் பலர் கொத்தணி அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பத்திரிகையாளர்களின் பெருந்தன்மை!

சென்னை, பெப். 15

சென்னையிலிருந்து வெளிவரும் பத்திரிகையான ''பாலா''வை தொடர்ந்து நடாத்துவதற்கு வசதியாக, அதை நடாத்தும் மேலாய்-நப்தி சம்பதிகள் தமது [illegible]று நீரகத்தை ஒருலட்ச ரூபாய்க்கு விற்பனை செய்வதற்கு முன் வந்துள்ளார்கள். இப்பத்திரிகை சீர்திருத்தவாதிகளால் நடாத்தப்படுகிறது. இப்பத்திரிகை வரதட்சனை வாங்காமல் திருமணம் செய்பவர்களுக்கு இலவசமாக திருமண விளம்பரங்களை பிரசுரித்து அவர்களது திருமணத்தை நடாத்திவைக்கிறது. (12)

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

சாகப்போவதாக அடிக்கடி கூறிவந்ததுடன் மூன்று தடவை தற்கொலை செய்ய முயற்சித்தவருமாவர். நேற்று நச்சுத்திரம்வகம் அருந்தி தற்கொலைசெய்துகொண்டார்.

யாழ். கொட்டடியைச் சேர்ந்த [illegible] சண்முகநாதன் (வயது 40) என்பவரே தற்கொலை செய்தவராவர்.

மரண விசாரணையின் பின் சடலம் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு-56)

## ப. நோ. கூ. சங்க பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 24-ம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத்தலைவர் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. பி. நித்தியராஜ் உட்பட பலர் கலந்துகொளவார்கள்.

சங்க வரவு செலவுத் திட்டமும் இக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சங்க பொதுமுகாமையாளர் திரு. வைரவநாதன தெரிவித்தார்

## வங்கிகளில் பணப்புழக்கம் இல்லை

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள வங்கிகளில் கடந்த இருவார காலமாக பணக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## புலமைப் பரிசில் சித்தி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கொத்தணியில் கஷ்டப் பிரதேசப் பாடசாலையாகக் கணிக்கப்படும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் இவ்வருடம் இரு மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் தேறியுள்ளனர்.

இவ்வருடம் சமய பாடப் பரீட்சையிலும் ஒருவர் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

## இராஜ கோபுரம் அமைக்கப்படும்

(வட்டுக்கோட்டை)

பிரசித்திபெற்ற வட்டுக்கோட்டை வீரபத்திரசிவன் கோவிலில் சுமார் 15 லட்சரூபா செலவில் இராஜ கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தியாவின் பிரசித்தி பெற்ற சிற்பிகளால் அமைக்கப்படவுள்ள இக்கோபுரத்திற்கான அத்திபார ஆரம்ப வேலைகள் கடந்த மாத இறுதியில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

## வருடாந்த உற்சவம்

(வட்டுக்கோட்டை)

கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் பத்தாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து இக்கோவில் உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் இருபத்து மூன்றும் திகதி மகா சிவராத்திரி தினத்தன்று ரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை கீரிமலைக் கடலில் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

ரதோற்சவத்தையும் தீர்த்தோற்சவத்தையும் முன்னிட்டு விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது அவசியம்

[வட்டுக்கோட்டை]

உடுவில் கமநல சேவை நிலையத்தைச் சேர்ந்த காணி உரிமையாளர்களும் இருப்பாட்சியாளர்களும் தத்தமது வயல்களில் பொருத்தமான பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதுடன் சரியான முகாமையும் செய்ய வேண்டுமென்று உடுவில் பகுதி கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. க. மகாதேவராஜா தெரிவித்துள்ளார்.

இந்த அறிவித்தலை நடைமுறைப்படுத்தாதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ப. நோ. கூ. ச. தலைவர்

(மட்டுவில்)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக ஆசிரியர் க. நடராஜாவும், உப தலைவராக ஆசிரியர் செ. சுப்பிரமணியமும் பதவியேற்றுள்ளனர்.

கனவான்கள் ஒப்பந்த அடிப்படையில் முன்னாள் தலைவர் சட்டத்தரணி சி. பொ. மயில் [illegible] அடுத்து இப்புதிய நியமனம் வழங்கப்பட்டது. (82)

## மண்டலாபிஷேகம்

(அச்சுவேலி)

நவக்கிரி பூவடி வைரவர் கோவில் மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தற்போது மண்டலாபிஷேகம் நடைபெறுகின்றது.

இதனைத் தொடர்ந்து இறுதிநாள் சங்காபிஷேகம் நடைபெறும். 40 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும்.

## விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டி இம்மாதம் 22-ம்திகதி மாலை நடைபெறவுள்ளது.

## பொதுச் சபைக் கூட்டம்

(அச்சுவேலி)

வலிகிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் புதிய இயக்குநர்சபை உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான பொதுச்சபைக்கூட்டம் இம்மாதம் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மேற்படி வித்தியாலயப் பழைய மாணவரான விரிவுரையாளர் திரு. செ. கிருஷ்ணராசா கலந்துகொள்வார். திருமதி எஸ். கிருஷ்ணராசா பரிசில்களை வழங்குவார். (5)


## NEW MASTER INSTITUTE

B. M. C. LANE — JAFFNA.
241, NAVALAR ROAD — JAFFNA.

**BOTANY 91 A/L**

"உடற்தொழிலியல்"

ஆசிரியர்:
திரு. V. குகாதரன்

ஆரம்பம்: 17-02-1990 சனிக்கிழமை

(சி 520)

## பத்திரிகையாளராக வர விரும்புகிறீர்களா?

பத்திரிகைத் தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட்டுப் பயில விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எழுத்துத் துறையில் ஈடுபாடும், மொழியறிவும் விசேட தகைமைகளாகக் கணிக்கப்படும்.

வயது, கல்வித்தகைமை, எழுத்துக்துறை அனுபவம், தமிழ், ஆங்கில மொழித்தேர்ச்சி உட்பட சகல விபரங்களுடனும் 23-2-90க்கு முன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி,
'ஈழநாடு',
த. பெ. எண். 49
யாழ்ப்பாணம்.

(சி-529)

## யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள், ஆசிரியர்களுக்கான பொதுக்கூட்டம்

திகதி: 18-02-1990 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: பி. பகல் : 1-30
இடம்: பொண்ட் கல்வி நிறுவனம்
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியத்தில் இதுவரை பதிவுசெய்த, பதிவு செய்யாத, யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்களும் இத்துறையுடன் தொடர்பான அனைத்து ஆசிரியர்களும் இக்கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

பிற்குறிப்பு: 18-02-1990 ஞாயிற்றுக்கிழமை. யாழ். மாவட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும், பிற்பகல் வகுப்புகளை நிறுத்தி, மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

இணைச்செயலாளர்கள்,
தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்.

(எ-3390)

## வேலைக்கு ஆட்கள் தேவை

(1) அனுபவம்வாய்ந்த சமையல்காரர்.
சம்பளம்: ரூபா 2000-00 மேல் வழங்கப்படும்.

(2) பாதுகாப்பு உத்தியோகஸ்தர் (Security Guards) 40—45 வயதுக்கிடைப்பட்டவராகவும், வாகனம் செலுத்தக்கூடிய தகுதியுடையவராகவும் இருக்க வேண்டும்.

(3) தோட்ட வேலையாட்கள் (Gardeners) குறைந்தது ஐந்து வருட அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(4) கோழிப்பண்ணையில் கடமையாற்றக்கூடிய கூலியாட்கள் குடும்பப்பொறுப்பற்ற தனியாட்கள் விரும்பத்தக்கது.

**18-02-90 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 9-00 மணி முதல்**
**11-00 மணிவரை நேரில் வரவும்**

எமது ஸ்தாபனம் பொதுமக்கள் சேவைக்காக காலை 9-00 மணி முதல் இரவு 10-00 மணிவரை திறந்திருக்கும்.

**OLD PARK**
**CHINESE RESTAUARANT**

207, OLD PARK ROAD,
Chundikuli, Jaffna.

(சி 539)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய எல்லைக்குள் ஊடுருவுவதை உடன் நிறுத்துக!

# பாகிஸ்தான் இராணுவத் தளபதி எச்சரிக்கை

## அரசியல்வாதிகள் மீதும் கண்டனம்

(கராச்சி)

**இந்தியா-பாகிஸ்தானிடையே உள்ள ஐ. நா. வினல் அங்கீகரிக்கப்பட்ட யுத்த நிறுத்த எல்லையை பாகிஸ்தானியா ஊடுருவுவதை உடன டியாக நிறுத்த மேண்டுமென்றும் இது சட்டரீதியானதுமல்ல என்றும் பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் மிர்ஷா அஸ்லம் பேக் எச்சரித்துள்ளார்.**

ஜம்மு காஷ்மீர் பிரதேசம் தொடர்பாக இரு நாடுகளி டையேயும் கடந்த சிலவாரங் களாக ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அடுத்து எழுந்துள்ள நிலைமை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு எச்சரித்தார்.

தளபதி மிர்ஷா மேலும் தெரிவிக்கையில், அரசியல்வா திகள் தமக்கு சாதகமான முறையில் நடந்து கொள்வ தால் பல விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படுகின்றன. பொதுமக்களின் மன உணர்ச்சி களைத் தூண்டிவிடாது அவர் களை நிதானத்துடன் செயல் படுமாறு அரசியல்வாதிகள் வற்புறுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

எனினும் ஜம்மு காஷ்மீர் பகுதிக்குள் தொடர்ந்தும் பாகிஸ்தானியர் ஊடுருவிவரு வதால் நிலைமை மோசமடை ந்துவருவதாக இந்திய தரப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனல் ஜம்மு காஷ்மீர் நியாயமானமுறையில் பாகிஸ் தான் பக்கமே சேரவேண்டிய பிரதேசமென்றும் இந்தியா ஏன் இப்பகுதியில் சர்வ ஜன வாக்கெடுப்பை நடாத்தத் தயங்குகிறது என்றும் பாகிஸ் தான் பிரதமர் திருமதி பெனு ஸிர் பூட்டோ கேட்டுள்ளார்

### ஆப்கான் கண்டனம்

இதேவேளை, பாகிஸ்தான் இந்தியாவின் உள்விவகாரங் களில் தலையிடுவதை உடனடி யாக நிறுத்த வேண்டுமென ஆப்கான் வெளியுறவு அமைச் சர் ஜனப் அப்துல் வக்கீல் தெரிவித்துள்ளார். இதனல் பாகிஸ்தான் மோசமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்குமென்றும் கூறிய அவர் இந்தியாவுக்கு தமது முழு ஆதரவும் இருப்ப தாகவும் கூறியுள்ளார்.

## திருக்குறள் பற்றிய புதிய ஆய்வுகள்...

சென்னை, பெப். 15

சென்னையில் அமைந்திருக் கும் திருக்குறள் ஆய்வுவட் டம் திருக்குறள் பற்றிய சுவையான தகவல்களை வெளி யிட்டுள்ளன.

திருக்குறளில் 'கடவுள்' என்ற சொல் ஒருதடவையும் இடம்பெறவில்லை. 'தெய்வம்' என்ற சொல்தான் பல இடங்களில் இடம்பெற்றுள ளது.

திருக்குறளில் திருவள்ளு வர் பயன்படுத்திய மலர்கள் இரண்டே இரண்டுதான். அவைகள் அனிச்சமலர். குவளைமலர்.

திருக்குறளில் திருவள்ளுவர் பழங்களை கையாளுவதில் அவர் காட்டிய சிக்கனம் வியப்புக்குரியது. அவர் எடுத் துக்கொண்ட பழம் ஒன்றே ஒன்று அது நெரிஞ்சிப்பழம்.

திருக்குறளில் திருவள்ளுவர் ஒன்று என்னும் எண்ணை 11 இடங்களிலும், இரண்டு என்பதை 14 இடங்களிலும், மூன்று என்பதை பத்து இடத் திலும், நான்கு என்பதை பதினெரு இடத்திலும், ஐந்து என்பதை 14 இடத்திலும். ஆறு என்பதை ஒரு இடத்தி லும், ஏழு என்பதை ஏழு இடத்திலும், எட்டு பத்து நூறு ஆயிரம் என்ற சொற் களை முறையே ஒரு இடத்தி லும், கோடி என்ற சொல்லை ஏழு இடங்களிலும், எழுபது கோடி என ஒரு குறளிலும் எழுதியுள்ளார்.

திருக்குறளில் உள்ள 133 அதிகாரங்களில் ஒரே ஒரு அதிகாரம் மட்டும் இருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அது குறிப்பறிதல் என்ற அதிகாரம் மட்டுமாகும்.

மேலுதடும் கீழுதடும் ஒட் டாமல் சொல்லக்கூடிய சொற் கள் வரும் பாடல்கள் அல்லது வாக்கியங்களுக்கு இலக்கணத் தில் நீரோட்டம் என்று பெயர். இந்தகைய பாடல் கள் திருக்குறளில் 43 உள்ளன.

தமிழ் மொழியில் சிறப்புக் குரிய எழுத்து 'ழ' ஆகும். அத்தகைய சிறப்புக்குரிய 'ழ' கரமும் அதன் இனமும் அதி கம் வரும் பாடல் திருக்குற

(7ம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பாவிலிருந்து படை விலகல் சோவியத் - அமெரிக்கா இணக்கம்

### விரைவில் ஆரம்பம்

(ஒட்டாவா)

ஐரோப்பிய நாடுகளிலிருந்து தமது பெருந் தொகையான படைபலத்தைக் குறைக்க சோவியத்தும், அமெரிக்காவும் ஒப்புக்கொண்டு உடன் படிக்கை ஒன்றிலும் கைச்சாத் திட்டுள்ளன.

இவ்வுடன்பாடு நேற்று முன்தினம் கனடா தலைநகர் ஒட்டாவாவில் கைச்சாத்தா னது. இதில் அமெரிக்க, சோவி யத் வெளியுறவு அமைச்சக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஐரோப்பிய நாடுகளில், இரு நாடுகளும் தலா 1,95,000 துருப்புக்களை நிறுத்தி யுள்ளன. இவற்றை உடனடி யாகப் பெருமளவில் குறைக்க இவ்வுடன்பாடு வழிவகுக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின் றது.

இதேவேளை கடந்த வருட நடுப் பகுதியில் கைச்சாத் தான உடன்பாட்டுக்கமைய இரு நாடுகளும் ஐரோப்பிய வட்டகையிலிருந்து குறுந்தூர, நடுத்தர ஏவுகணைகளையும், பெருமளவு இராணுவத் தள பாடங்களையும குறைத்துவரு வதும் குறிப்பிடத்தக்கது.

## தென் ஆபிரிக்கா சென்ற இங்கிலாந்து கிரிக்கெட்குழு உடன் நாடு திரும்புகிறது

(ஜொகனஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் இரு மாத கால சுற்றுலாவை மேற் கொண்டு பல போட்டிகளில் கலந்துகொண்ட இங்கிலாந்து கிரிக்கெட் குழு ஒன்று அதனை இடைநடுவில் நிறுத்தி தாய கம் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணியின் முன் ஞள் காப்டன் மை கெற்றிங் தலைமையிலான இக்குழு பல நாடுகளினதும் பலத்த எதிர்ப் பின் மத்தியில் பெருந்தொகை பணத்திற்காக இங்கு போட்டி களில் கலந்து கொண்டது.

எனினும் திரு. நெல்சன் மண்டேலாவின் விடுதலையை அடுத்து தென் ஆபிரிக்காவில் எழுந்துள்ள நிலையினல் இந்த சுற்றுலாவின் இறுதிப் பகுதியை உடன் நிறுத்தி தாய கம் திரும்ப கிரிக்கெட் குழு முடிவு செய்துள்ளது.

## அமெரிக்கபாதுகாப்புசெலவு பெருமளவு குறைகிறது

(வாஷிங்டன்,

அமெரிக்கா இவ்வருடம் தனது பாதுகாப்பு செலவி னத்தை பெருமளவில் குறைத் துள்ளது. 1990ம் ஆண்டு 1,80,000 மில்லியன் டாலரி ஞல் பாதுகாப்புத்துறைக்கு வெட்டுவிழும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

சோவியத் யூனியனினுல் இதுவரை காலமுமிருந்துவந்த இராணுவ அச்சுறுத்தல் படிப் படியாக குறைவதன் காரண மாகவும், இன்று சர்வதேச அரங்கில் ஏற்பட்டுள்ள பல புதிய சிந்தனைகளையுமடுத்தே அமெரிக்கா தனது பாது காப்பு செலவினத்தை பெரு மளவில் குறைக்கிறது.

மேற்படி தகவல்களை பென் டகன் பாதுகாப்புக் காரிய தரிசி திரு. ரிச்சாட் சேனி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்; பல தசாப்தங்களாக சர்வதேச உறவுகள் ராணுவ பலத்தின் கீழ் ஆட்சி செய்யப்பட்டுவந் தது. இந்த நிலைமை இன்று மாற்றமடைந்து வருகின்றது,

மங்கோலியா மற்றும் ஆப் கானிஸ்தானிலிருந்து சோவி யத்துருப்புகள் வாபஸ் பெறப் பட்டதும் அமெரிக்காவின் இராணுவ பட்ஜெட்டில் தாக் கத்தை ஏற்படுத்தியுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம்

## சிறந்த தமிழ் நூலுக்கு பரிசாக 5000 ரூபாவை வழங்கும்

கோலாலம்பூர் பெப் 15.

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் உலகம் முழுவதும் செறிந்து வாழும் தமிழர் களிடையே, தமிழ்நூல் எழு தும் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் சிறந்த தாகத் தெரிவு செய்யப்படும் நூலுக்கு, இரா. த. வீரப் பஞர் அறக்கட்டளை பரிசு வாரியத்தில் இருந்து ஐயா யிரம் ரூபா இந்திய நாண யத்தில் வழங்கப்படுமெனத் தெரிவித்துள்ளது.

இப்போட்டிக்குப் பத்தா யிரம் சொல்லுக்குக் குறை யாத வகையில் அவர்களால் வழங்கப்பட்டுள்ள தலைப்புக் களை அடிப்படையாகக் கொண்டு நூல் எழுதப்பட வேண்டுமென அவர்களால் வெளியிடப்பட்ட போட்டி சம்பந்தமான பிரசுரத்தில் தகவல் வெளியிடப்படவுள் ளது.

அவர்களால் வழங்கப்பட்ட தலைப்புக்கள் வருமாறு;

தமிழகம், தமிழீழம் அர சுகளின் தமிழ் பேராயங்களும் வருங்காலமும்.

தமிழர்தம் தாய்மொழி பண்பாட்டு மரபுகள்.

ஐ. நா. கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ அதன் உலகைக் காட்டும் பலகணியான பணி கள்.

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கங்களின் அனைத்துலகத் தொடர்புப் பணிகள்.

உலகத்தமிழ் ஒலி ஒளி பரப் பில் பன்ஞட்டு வானெலி, தொலைக்காட்சியின் பணிகள்,

சிறுபான்மையினர் தமிழர் பல நாடுகளில் குடிபுகும் சூழ் நிலையின் காலகட்டம் (1970-1990 வரை)

தமிழர் குடியேற்றத்தினல் ஐரோப்பிய அரசியல் வரலாற் றுச் சூழல்கள் (18-20ம் நூற் ருண்டு)

பல நாடுகளில் இயங்கும் பல்கலைக் கழகங்களில் தமி ழாய்வுத் துறைகள்.

இலங்கை, தமிழகம் உட்பட இந்தியப் பல்கலைக் கழகங் களின் தமிழ்க் கல்வியும், தமி ழாய்வும்.

நடந்து முடிந்த ஏழு தமி ழாராய்ச்சி மாநாடுகளின் படைப்புக்கள்.

இப்போட்டிக்கான முடிவு திகதி மே மாதம் முப்பத் தோராம் திகதியெனக் குறிப் பிடப்பட்டுள்ளது. பரிசளிப்பு வைபவம், இந்தியாவில் நவம் பர் மாதம் இருபத்தைந் தாம் திகதி நடைபெறவுள் ளது. ஆக்கங்களை International Movement for the Tamil culture 110 Jalanbangag, Berkerly Garden 41150 Klang Malaysia என அனுப்ப வேண்டுமென அறிவிக்கப்பட் டுள்ளது. பரிசு பெறும் நூலை உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் தனது சொந்தச் செலவில் அச்சிட்டு வெளி யிடவுள்ளது. (12)

வடக்கு - கிழக்கில்

## 20,000 அமைதிப் படையினர் நிலைகொண்டுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு- கிழக்குப் பகுதிகளில் தற் போது 20,000 இந்தியப் படையினரே நிலைகொண்டி ருப்பதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. மேற்படி படையின ரும் மார்ச் மாதம் 31-ம் திக திக்குள் வடக்கு-கிழக்குப் பகு தியிலிருந்து வெளியேறுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

தற்போது யாழ். மாவட் டத்தின் சில பகுதிகளிலும், திருமலை மாவட்டத்திலுமே அமைதிப் படையினர் நிலை கொண்டுள்ளனர். யாழ். மாவட்டத்திலிருந்து இம்மாத இறுதிக்குள்படையினர்முற்ருக வெளியேறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பண்டத்தரிப்பு அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்பட்டது

(பண்டத்தரிப்பு)

வலி-தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலகப் பகுதி யில் கடந்த 1989-ம் வருட புனருத்தாரண, புனர்நிர் மாண வேலைத்திட்டத்தின்கீழ் மூன்று வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மொத் தம் இரண்டு லட்சத்து 55ஆயி ரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் கிராம அலுவலகக் கட்டிடத்தை திருத்துவற்கு 75 ஆயிரம் ரூபாவும், மாதகல் - பெரிய விளான் வீதியை புனரமைப்ப தற்கு 90 ஆயிரம் ரூபாவும்,

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

தூய்மையான தியாகத்துக்குத் தக்கவாறு வேகமான முன்னேற்றம் அமைந்திருக்கும்.

—மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## மனப்போக்கு மாறவேண்டும்!

இன்று தமிழ்ப்பகுதி விரைவாக வழமை நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது: பலருக்கு மகிழ்ச்சி தான்.

வியாபார நிலையங்களும், ஸ்தாபனங்களும் மீண்டும் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துவிட்டன. எனவே மக்கள் நடமாட்டமும் அதிகரித்து வருகின்றது. வீதிகள் தோறும் வாகனப் போக்குவரத்தும் வேகமாக அதிகரித்துவருகின்றது; வரவேற்கவேண்டியதுதான்.

இந்த நிலையில், மக்கள் இயல்புநிலைக்குப பூரணமாகத் திரும்பிவிட்டதாக எண்ணலாமா?

பொருட்களின் தட்டுப்பாடு, விலையேற்றம், பஸ்களில் நெரிசல், நிர்வாகத் தாமதங்கள் போன்ற செய்திகளும் கண்ணிற்படுகின்றன.

உதாரணத்திற்கு ஒன்று. வடமராட்சிப் பகுதியில், மினி பஸ்ஸிலிருந்து ஓர் இளம்பெண் தவறிவிழுந்து மரணமானுர் என்ற கவலை தரும் செய்தி வந்துள்ளது.

பஸ்களின் எண்ணிக்கை போதாமை, மக்களின் நடமாட்டத்தில் திடீரென ஏற்பட்ட உயர்ச்சி, பல வாகனங்கள் திருத்தப்படவேண்டிய நிலை போன்ற காரணிகளால் ஏற்படும் பல சிக்கல்களை நாம் அறிகிருேம்.

எனினும். எரிகிற வீட்டிற் பிடுங்கியது இலாபம் என எண்ணிக் கருமம் ஆற்றும் 'நோய்' நமது சமுதாயத்தில் வேரூன்றிக் கிடப்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிருேம்.

நெருக்கடி நிலைகள் தளர்ந்து. சமுதாயம் மெல்ல மெல்ல வளர்ச்சிப் பாதைக்கு அடியெடுத்து வைத்து வரும் வேளையில், பொதுநலத்தை முன்வைத்துக் கருமம் ஆற்றும் மனப்போக்கு வளர வேண்டாமா?

சமுதாயத்தின் சுமூக வாழ்விற்கெனச் சட்ட விதிகளை இயற்றுவதும், அவற்றை மீறுவோருக்குத் தண்டனை வழங்கலும் அரசின் முக்கிய பணிகளாகும்.

அடிப்படை உரிமைகளையே வழங்காது. அடக்கு முறைகளால் ஆள நினைத்த அரசிற்குச் சவால் விடுத்தார்கள் இளைஞர்கள். அதனுல் நெருக்கடி நிலை தோன்றியது.

இந்த நிலையைப் பயன்படுத்தி, சமுதாய விதிகளை மீறிப் பொதுநலத்திற்குக் கேடு விளைவிப்போரைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. கண்காணிக்க எவரும் இல்லை என எண்ணிக் கருமமாற்றுவோர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

தியாகங்கள் புரிந்து பெறும் உரிமைகள் சிறப்பாகப் பேணப்பட வேண்டுமானுல். சமுதாயம் அதற்குத் தகுதி பெற்றதாக அமைய வேண்டும்.

வீதி விதிகள், வர்த்தக விதிகள், அரச நிர்வாக விதிகள் போன்ற பல விதிகளை மக்கள் தாமாகவே உணர்ந்து அவற்றிற்கு அமைய நடக்க முன்வர வேண்டும்.

அன்பான வேண்டுகோள்களுக்கு ஏற்ப தமது மனப்போக்கை மாற்ற வேண்டும். பெருமளவு மக்கள் இதற்குச் செவிசாய்ப்பார்கள் என நம்புவோமாக.

# அமெரிக்க சினிமா உலகில் ஜப்பானின் ஆக்கிரமிப்பு

இரண்டாம் உலக யுத்தத்தின்போது தரைமட்டமான ஒரு நாடு ஜப்பான் ஆனுல் ஜப்பான் இன்று பொருளாதாரத்துறையின் வளர்ச்சியில் ஒரு ராட்சதவடிவம் எடுத்து செல்வந்த நாடுகள் பலவற்றையும் ஆட்டம் காணும் நிலைக்கு உள்ளாக்கி வருகிறது.

ஜப்பானின் பொருளாதார வளர்ச்சியையும். அதிதொழில் நுட்ப வளர்ச்சியையும் கண்டு அமெரிக்கா உட்பட பல கைத்தொழில் நாடுகள் அசந்துபோய் மூக்கின்மேல் விரலை வைக்க ஆரம்பித்துள்ளன.

ஜப்பானின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கிவரும் அதன் தொழில் நுட்ப ரகசியங்களை ஜப்பான் எமக்கு சொல்லித்தராதா என அமெரிக்க மக்கள் இன்று தவியாய்த் தவிக்கிருர்கள். அந்த அளவுக்கு ஜப்பானின் வளர்ச்சி அமெரிக்க மக்களை இன்று பாதித்திருக்கிறது.

உள்ளூரில் அதன் தொழில் நுட்பத்திட்டங்களையும் முதலீடுகளையும் அதிகரித்திருக்கும் ஜப்பான் அதோடு திருப்தியடைந்துவிடவில்லை. பல உலக நாடுகளுக்கும் படையெடுத்து பல்வேறு வகையான முதலீட்டுத் திட்டங்களை அது ஆரம்பித்துவருகிறது குறிப்பாக அமெரிக்காவில் ஜப்பானியர்களின் முதலீடு கணிசமான அளவு அதிகரித்திருக்கிறது.

கடந்த வருடம் 340 கோடி அமெரிக்க டொலர்களைக் கொட்டிக் குவித்து சர்வதேச சினிமாத் துறையின் கேந்திர நிலையமாகக் கருதப்படும் ஹொலிவூட்டில் ஒரு புகழ்பெற்ற சினிமா ஸ்ரூடியோவையே ஜப்பான் கொள்வனவு செய்துவிட்டது என்ருல் பார்த்துக்கொள்ளுங்களேன்.

அமெரிக்காவில் ஆங்கிலப் படங்களைத் தயாரிப்பதில் புகழ்பெற்ற ஸ்தாபனங்களில் ஒன்று கொலம்பியா ஸ்தாபனம். அந்த ஸ்தாபனத்துக்கு சொந்தமான கொலம்பியா ஸ்ரூடியோவையே ஜப்பான் கொள்வனவு செய்திருக்கிறது.

ஜப்பானிலுள்ள மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்று 'சொனி' நிறுவனம். ஒலி பரப்பு, ஒளிபரப்புதுறைகளுக்குத் தேவையான அதிநுட்ப சாதனங்களைத் தயாரித்து உலகப் புகழ்பெற்ற நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது இந்த நிறுவனம். ஒலி ஒளி இரண்டுமே சினிமாத்துறையுடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருப்பதன் காரணமாக சினிமாத்துறையிலும் தாங்கள் காலடி எடுத்து வைக்கவேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகவே அமெரிக்காவில் இவ்வளவு பெரும்பணத்தைக் கொட்டிக் குவித்து கொலம்பியா ஸ்குடியோவைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறது சொனி.

340கோடி அமெரிக்கடொலர்களைக் கொட்டி ஒரு பெரிய ஸ்ரூடியோவைக் கொள்வனவு செய்திருக்கும் சொனி நிறுவனத்தை ஒரு சாதாரண ஸ்தாபனம் என்று நினைத்துவிடாதீர்கள். அந்தஸ்தாபனத்திடம் உள்ள முதலீட்டுச் சொத்துக்களின் பெறுமதி மாத்திரம் 17ஆயிரத்து 800 கோடி அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

வெறும் ஸ்ரூடியோ ஒன்றை மாத்திரம் சொனி வாங்கிவிட்டதாக நினைக்கவேண்டாம் 'லோரன்ஸ் ஒப் அரேபியா' (Lawrence of Arabia) உட்பட புகழ்வாய்ந்த இரண்டாயிரத்து எழுநூறு ஆங்கிலப் படங்களை உள்ளடக்கிய ஒரு சினிமா களஞ்சியததையும் சேர்த்தே அந்த நிறுவனம் வாங்கியிருக்கிறது.

அந்த சினிமாக் களஞ்சியத்தில் பெறுமதிவாய்ந்த 260 தொலைக்காட்கிப் படங்களும் இருக்கின்றன. இந்த சினிமாப் படங்களையும் தொலைக்காட்கிப்படங்களையும் வைத்தே சொனி நிறுவனம் பெரும் தொகைப் பணத்தைச் சம்பாதித்துவிடும் என அமெரிக்க சினிமா உலகப் பிரமுகர்கள் இப்போதே மதிப்பீடு செய்துவிட்டனர்.

இப்படியான ஒரு அமெரிக்க சொத்து ஜப்பானியர்களின் கைக்கு மாறியிருப்பதை அமெரிக்கர்கள் அவ்வளவாக விரும்பவில்லை. கொலம்பியா ஸ்ரூடியோ அண்மையில் கைமாறியதையடுத்து அமெரிக்காவில் ஒரு கருத்துக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

கொலம்பியா ஜப்பானியர்களின் வசம் கைமாறியது மோசமானது என 43 சதவீதமான அமெரிக்கர்கள் வாக்களித்தனர். அவ்விதமான ஒரு கைமாற்றம் சாதகமானதே என 19 சத விகிதமானவர்கள் மாத்திரம் வாக்களித்தனர்.

ரஷ்யாவின் இராணுவச் சக்தி அச்சுறுத்தலைவிட ஜப்பானின் பொருளாதாரச் சக்தி தரும் அச்சுறுத்தலானது மிகவும் பயங்கரமாக இருப்பதாகவும் அமெரிக்க மக்கள் இப்போது கருத ஆரம்பித்திருக்கின்றனர்.

அமெரிக்காவில் ஒரு வெறும் கட்டிடத் தொகுதியை மாத்திரம் ஜப்பான் வாங்கவில்லை. கொலம்பியா ஸ்ரூடியோவைத் தனதாக்கிக்கொண்டதன் மூலம் ஜப்பான் அமெரிக்காவின் இதயத்தின் ஒரு பகுதியையே வாங்கிவிட்டது என அமெரிக்க மக்கள் இன்று ஏக்கப் பெருமூச்சுவிடுகின்றனர்.

புகழ் வாய்ந்த அமெரிக்கச் சொததுக்களை அதிகளவில் கொள்வனவு செய்வதில் ஜப்பான் இன்று உலகிலேயே இரண்டாவது ஸ்தானத்தை

(7ம் பக்கம் பார்க்க)

பெஞ்சமின் இராசரத்தினம்

# பலதும் பத்தும்

## நீரிழிவு

உலகிலே சுமார் நான்கு சதவீதமான மக்கள் நீரிழிவு நோயினுல் வருந்துகிருர்கள். அமெரிக்காவிலும், கனடாவிலும் மாத்திரம் பன்னிரண்டு மில்லியன் மக்கள் இவ்வியாதியாற் பீடிக்கப்பட்டிருக்கிருர்கள்.

பண்டத்தரிப்பில் நீண்டகாலமாக எமது பத்திரிகையின் விநியோகஸ்தராகக் கடமையாற்றியவர் அண்மையில் காலமானுர். அவர் நீரிழிவினுல் கஷ்டமுற்றவர் எனினும நீண்ட காலத்திற்கு வாழவைத்தது எது? இன்சுலின்.

இந்த நோயினுற் கஷ்டப்படுபவர்களில் அரைவாசிப் பேருக்கு மேல் இன்சுலின் ஊசி மருந்து தேவைப் படுகிறதாம்.

புதிய மருந்தைக் கண்டுபிடித்து நீரிழிவை முற்ருகக் கட்டுப்படுத்த கனடா, பிரான்ஸ் நாட்டு மருத்துவ நிபுணர்கள் கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். பிரித்தானியக் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின் மருந்து உற்பத்தி ஆய்வுப் பணித் தலைமைப் பேராசிரியராகக் கடமையாற்றி வருபவர் ஜோன் மக்நெயில்.

''வனடையில்'' என்ற இரசாயனச் சேர்வை இன்சுலினின் வேலையைச் செய்யும் என அவர் கண்டுபிடித்திருக்கிருர். இதிற் சேர்ந்திருக்கும ''வனேடியம்'' என்ற மூலகம் பெறுமதி மிக்கது. உருக்குப் போன்ற கலப்பு உலோகங்களின் முறுக்கு நிலையை உயர்த்தப் பயன்படுவது.

இந்த மருந்தைப் பாவித்தால், நீரிழிவு அழிந்து உடலும் ''முறுக்கு'' நிலையை அடையுமா?

அவசரப்படாதீர்கள்! பரிசோதனையின் பின் 'இம் மருந்து சந்தைக்கு வரட்டும்!

வாணி

# ''பொருள்களின் விலையை எக்காரணத்தைக் கொண்டும் வர்த்தகர்கள் அதிகரிக்கக்கூடாது''

(மட்டுவில்)

''அண்மைக்காலப் போராட்டங்களை ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு வர்த்தகர்கள் உணவுப் பொருள்களையும், அத்தியாவசியப் பொருள்களையும் விலை கூட்டி விற்ருல் அப்பாவிப் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இதனுல் வர்த்தகர்கள் சமூக விரோதக் குற்றத்திற்குள்ளாக வேண்டி நேரிடும். எனவே வர்த்தகர்கள் பொருள்களின் விலையைக் கூட்டாமல் நாட்டு மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் கூறினார்.

சாவகச்சேரியில் உள்ள வர்த்தகர்களை அண்மையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் சந்தித்தார்கள். சாவகச்சேரி தெய்வேந்திரா படமாளிகையில் நடந்த இச் சந்திப்புக்கு, சாவகச்சேரி புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பொறுப்பாளர் திரு. கே. பாப்பா தலைமைதாங்கினுர்.

திரு. ஸ்டான்லி டொமினிக் மேலும் பேசுகையில், இந் நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்த அனைவரினதும் ஒத்துழைப்புகளையும் வேண்டிநிற்கும் இதேவேளையில் வர்த்தகர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாக அமைகிறது.

''மக்களின் அத்தியாவசியத் தேவைப் பொருட்களின் விலையை உயர்த்தாமல் அதன் உத்தரவாத விலைக்கு விற்பதன் மூலம் நீங்கள் இந்த நாட்டின் மக்களுக்குச் சேவை செய்தவர்களாவீர்கள்.'' (82)

## காலை 10 மணிச் சட்டம் கொழும்பு நகரில் முதலில் அமுல்

(யாழ்ப்பாணம்)

அமைச்சரவையால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் காலை 10 முதல் இரவு 10 மணி வரை திறந்து வைப்பதற்கான சட்டம் முதலில் கொழும்பு நகர்ப் பகுதிகளிலேயே அமுல்நடத்தப்படவுள்ளது. இத்திட்டம் குறித்து யாழ். மாவட்டத் தொழில் திணைக்களத்துக்கு இதுவரை எவ்வித அறிவித்தலும்அனுப்பி வைக்கப்படவில்லையென அதிகாரிகள் தெரிவித்தனர். இத்திட்டம் கொழும்பு சுற்றுப் புறங்களில் முதலில் அமுல் செய்யப்பட்டு அதன் வெற்றியின் பின்னரே மாவட்ட ரீதியில் அமுல்செய்யப்படவுள்ளது. இதேவேளையில் யாழ். மாவட்டத் தொழில் திணைக்களம் சகல பணிகளையும் தீவிரப்படுத்தியுள்ளது. (12)

## அமைதிக்காக விசேட யாகம்

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சாந்தி, சமாதானம் நிலவவும் இனங்களுக்கிடையே நல்லுறவு மலரவும், பண்டாரவளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் விசேட மூன்று நாள் யாகம் ஒன்று நடைபெறவிருக்கின்றது.

இந்து சமய கலாசார தமிழ் மொழி அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் இந்த யாகம் இம்மாதம் 25ம், 26ம், 27ம் திகதிகளில் நடைபெறும். இந்த யாகத்தில் இந்து சமய கலாசார தமிழ்மொழி அலுவல்கள் அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ், ஊவா மாகாணமுதல்வர் திரு. பேர்சி சமரவீர மற்றும் மாகாண அமைச்சர்கள் உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள்.

## விவசாயிகளுக்கு இலவசமாக மண்வெட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வன்செயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பத்தாயிரம் மண்வெட்டிகளை இலவசமாக வழங்க கமநல சேவைத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்தவருடம் யாழ்.மாவட்டத்தில் ஐ. நா. சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட இரண்டாயிரத்திஐநூறு மண்வெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டன. இதனைவிட புனர்வாழ்வு அமைச்சினுல் நாலாயிரத்து அறுபத்தேழு மண்வெட்டிகளும் யாழ். மாவட்ட விவசாயுகளுக்கு இலவசமாக வழங்கப்பட்ள்ளன. (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப்படை இப்படித்தான் வந்தது

# "காலியாக வரும் விமானங்களில் சில இந்திய வீரர்களை அனுப்பலாமே"

## ராஜீவிடம் ஜே. ஆர். சொன்னது

[இந்திய - இலங்கை உடன்பாடு தொடர்பாகவும், இந்தியப் படைகள் இலங்கைக்கு ஏன் வந்தன என்றும் மற்றும் இதனால் இலங்கையில் ஏற்பட்ட பல நிகழ்வுகள் குறித்தும் அதற்கு முன் வடக்கு கிழக்கில் இலங்கை படையினரின் நடவடிக்கைகள் குறித்தும் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி வருமாறு]

கே; இந்திய இராணுவம் ஏன் இங்கு வந்தது?

ப: இந்திய-இலங்கை உடன்பாட்டை கொழும்பில் கைச்சாத்திட இந்தியபிரதமர் திரு. ராஜீவ் காந்தி இங்கு வந்திருந்தார் அவ்வேளை நாடு முழுவதும் மோசமான கலவரம் ஏற்பட்டிருந்தது இதனை கட்டுப்படுத்துமாறும் கொழும்பில் மேலதிகமாக பொலிஸாரை கடமையிலீடுபத்துமாறும் பொலிஸ்மா அதிபரை கேட்டபோது 2,400 பொலிஸார் கண்டி எசல பெரஹரவிற்கு சென்றுள்ளதாகவும் அவர்களை இங்கு வரவழைத்தால் பெரஹரவை நிறுத்தவேண்டியிருக்கும் என்றும் கூறினார்.

உடனடியாக பாதுகாப்பு படை தளபதியிடம் இது பற்றி கேட்டபோது வடக்கு-கிழக்கில் உள்ள படையினரை கொழும்பிற்கு கொண்டு வர போதிய விமான வசதி இல்லை என்றும் கூறினார். இந்நிலையில் எனது சங்கட நிலையை கேட்ட திரு. ராஜீவ் காந்தி தான் ஏதாவது உதவி செய்ய வேண்டுமா? என்று கேட்டபோது நான் எமது கஷ்டநிலை சிலவற்றை அவரிடம் கூறினேன். அப்போ தாம் சில விமானங்களை தந்துதவுவதாக கூறினார். வடக்கு-கிழக்கிலிருந்து படையினரை தெற்கே கொண்டு வந்தால் அப்பகுதி நிலை என்ன என்று திரு. காந்தி கேட்டார். அப்போது வடக்கு கிழக்கிலிருந்து படையினரை தெற்கே கொண்டுவர உங்கள் விமானம் வெறுமையாக வரும்போது அதில் ஏன் சிறு தொகை இந்தியப்படையினரை இங்கு அழைத்து வரக்கூடாது என்றேன். இது ஒப்பந்தத்தின் கீழ் உடன்பாடானது தானே என்றும் சொன்னேன். அதுவே இங்கு இந்தியப்படை வருகைக்கு காரணமானது.

கே; இந்தியப்படையினர் மீண்டும் திரும்பிப் போவார்களென நினைத்தீர்களா?

ப; இதில் சந்தேகப்பட எதுவும் இருக்கவில்லை. ஏனெனில் இங்கு வரும் இந்திய படையினர் இலங்கை இராணுவ தளபதியின் கீழும் இலங்கை ஜனாதிபதியின் கீழும் கட்டுப்படவேண்டும்.

கே: இந்த ஒப்பந்தம் இந்திய-இலங்கை தலைவர்களிடையே கைச்சாத்திடப்பட்டது. ஆனால் இதனை முக்கிய தமிழ் குழுக்கள் எதிர்த்தன. அவ்வாறிருக்கையில் வடக்கு-கிழக்கில் அமைதி எவ்வாறு தொடர்ந்து நிலைத்திருக்கும்?

ப: அது சரியானதல்ல. பிரதமர் காந்தி சகல குழுக்களுடனும் தொடர்பு கொண்டார். அனைவரும் இதற்கு உடன்பட்டனர். புலிகளும் உடன்பட்டனர். ஆனால் அதனை மீறிவிட்டனர். ஆகஸ்ட் முதலாம் திகதி திரு. காந்தி எனக்கு அனுப்பிய செய்தியில், ஒப்பந்த அமுலாக்கலுக்கு பிரபாகரன் உடன்படுவதாகவும் ஆயுதங்களை ஒப்படைப்பாரென்றும் குறிப்பிட்டிருந்தார் ஆயுத ஒப்படைப்பை யாழ்ப்பாணத்தில் பிரபாகரன் நடாத்துவாரென்றும் ஆகஸ்ட் 2-ம் திகதி மாலை இவைகளுக்காக, அவர் யாழ்ப்பாணம் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலைக்கு பிரபாகரன் உடன்பட மறுக்கும் பட்சத்தில் அவர்களிடமிருந்து கட்டாயமாக ஆயுதங்களை களைய இந்திய இராணுவம் ராணுவநடவடிக்கை எடுக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

கே: சக்திமிக்க இந்திய இராணுவம்.

ப: ஆம்.

கே: விடுதலைப் புலிகள் இதற்கு சவாலாக அமைவார்களென நீங்களோ அல்லது பிரதமர் திரு. காந்தியோ நினைத்திருந்தீர்களா?

ப: இல்லை. ஆனால் அவர்கள் முதலில் ஏற்றுக்கொண்டு பின்னர் அதை மறுத்தது ஏன் எனத் தெரியவில்லை. இது தான் பின்னர் பிரச்னையாக மாறியது.

கே: இந்த உடன்பாடு வேறு இன்னலகளை தோற்றுவிக்கவில்லையா?

ப: இது அமைதிக்காக செய்யப்பட்ட உடன்பாடு இரண்டரை மாதம் அமைதி நிலவியது. சிங்களவர்கள் வடக்கே செல்லும் நிலை உருவாகியது. அங்கு மீண்டும் பேக்கரி'கள் இயங்கத் தொடங்கின. சிங்களவர் 'நாகதீப'விற்கும் சென்றனர்.

இது திரு. ராஜீவின் யோசனையிலான உடனபாடு. நாம் தமிழ் போராளிகளுடன் 1976-ம் ஆண்டிலிருந்தும் சிங்கள தீவிரவாதிகளுடன் 1983 இல் இருந்தும் போராடி வந்தோம். தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியா குறிப்பாக தமிழ்நாடு தாராளமாக உதவி செய்தது. அத்துடன் எமக்குக் கிடைக்கவேண்டிய உதவிகளை தடுத்து வந்ததுடன் சர்வதேச ரீதியில் எமக்கெதிரான உணர்வலைகளையும் தோற்றுவித்தனர். எமது படைகளை தமிழ் போராளிகள் பலமாகத் தாக்கி வந்தனர்.

திடீரென 1987 ம் ஆண்டு மே யூன் பகுதியில் பிரதமர் காந்தி செய்தி ஒன்றை அனுப்பினார். அதில் நான 1986 டிசம்பரில் இலங்கை பாராளுமன்றத்தில் தெரிவித்தது போல் மாகாண சபை முறையை அமுலாக்கலும் அதிகார பரவலாக்கலிற்கு உடன்படவேண்டும் என்றும் புதிதாக வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்பு முறையை ஏற்படுத்தி பின் கிழக்கு மாகாணத்தவரின் விருப்பப்படி தொடர்ந்தும் இணைவதா அல்லது தனியாக பிரிவதா என சர்வஜன வாக்கெடுப்பு நிகழ்த்தலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார், இதற்கு உடன்பட்டால் தாம் சகல தமிழ் குழுக்களையும் ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயக வழியில் திரும்பவைக்க முடியும் என்றும் உடன்பாட்டையும், மாகாண சபை முறையையும் ஏற்றுக்கொள்ள செய்யலாம் என்றும் கூறியிருந்தார். மாகாண சபையையும் தற்காலிக வடக்கு-கிழக்கு இணைப்பும் இருந்த போதும் இதை எப்படி எதிர்க்க முடியும் என்றார். இதன் மூலம் திரு. காந்தி

## யாழ்ப்பாணத்தை கைப்பற்ற இலங்கைப் படை மறுத்தது

யுத்தத்தை நிறுத்தவும் இதை நாம் எதிர்க்கும் பட்சத்தில் சர்வதேச ரீதியில் எமக்கு நெருக்கடி கொடுக்கவும் யோசித்திருந்தார். ஆகவே நாம் இந்தியாவால் புதிதாக முன்வைக்கப்பட்ட வடக்கு- கிழக்கு தற்காலிக இணைப்பை எதிர்த்தோம்.

கே: உங்கள் எண்ணங்களை அவர் திசை திருப்பவில்லையா?

ப: நீங்கள் நினைப்பது 'உணவுப் பொதி' போட்டதையா?

கே: அதுவல்ல, திரு. டிக்ஷிற் மூலம் நெருக்கடி கொடுத்ததை?

ப: உணவுப் பொட்டலங்கள் வடக்கில் போட்டது தவறான செயல். இது பற்றி அவரிடம் கூறியிருந்தேன். மக்கள் மத்தியிலும் கூறினேன். நீங்கள் செய்தது என்னால் மன்னிக்க முடியும் ஆனால் மறக்க முடியாது என்றும் நான் திரு. ராஜீவிடம் கூறினேன்.

திரு. டிக்ஷிற் எனக்கு எவ்விதத்திலும் நெருக்கடி கொடுக்கவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தை இலங்கைப் படை கைப்பற்ற இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்று அமைச்சர் திரு. அத்துலத் முதலியிடம் திரு. டிக்ஷிற் கூறியிருந்தார்.

கே: இலங்கைப் படையால் அது எப்படி முடியும். இந்திதிய துருப்புகள் தமிழ் போராளிகளுக்கு வடக்கில் உதவுகின்றதே?

ப: இருக்கலாம், ஆனால் புலிகளுக்கு இந்தியா விமான எதிர்ப்பு ஏவுகணை வழங்கியுமிருந்தது. வடமராட்சி தாக்குதலில் படையினர் விமானம் ஒன்றை இழந்துவிட்டனர். இனியும் ஒரு விமானத்தை தாம் இழக்க தயாரில்லை என்று கூறி விமானப் படையினர் வடக்கே பறக்க மறத்து விட்டனர். விடுதலைப் புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை இருந்ததால் நாம் எமது வான் பலத்தை முற்றாக இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

கே: 1987ல் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற இலங்கைப் படையினர் தயாராயிருந்ததா? அதை நீங்கள் அதை தடுத்தீர்களா?

ப: இல்லை. வடமராட்சியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைக்கு முன் பெப்ரவரி மாதத்தில் யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் படியும் பின் வடமராட்சி தாக்குதலின் பின் மே மாதத்தில் கைப்பற்றுமாறு கூறியிருந்தேன். ஆனால் படையினர் அதற்கு உடன்பட மறுத்துவிட்டனர். (தொடரும்)

## முறைசாரா கல்வித்திட்டத்தில்

# பத்திரிகைதுறை உட்பட மேலும் இரு துறைகள் சேர்க்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளில், முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் தொழிற் கல்வி போதனை நெறியில் இவ்வருடம், பத்திரிகைத்துறை, தொலைக்காட்சி பழுது பார்த்தல், கட்புலசாதன உற்பத்தி ஆகிய துறைகள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ் மாவட்ட தொழிற்கல்வி அதிகாரி எஸ், சுப்பிரமணியம் தெரிவித்தார்.

பத்திரிகைத்துறை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் தொலைக்காட்சி பழுது பார்த்தல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கட்புலசாதன உற்பத்தி யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலயத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வாண்டு முப்பது பாடசாலைகளில் முறைசாராக்கல்வி திட்டத்தின் கீழ் 60 பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சிகளுக்கு இரண்டாயிரத்தி நானூறு பேர் பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சி எட்டு மாதங்களுக்கு வழங்கப்பட்டு பொதுப்பரீட்சையொன்றின் மூலம் சித்தியடைந்தவர்களுக்கு திணைக்கள சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணப் பிரதேசக் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப்பிரிவில் வழங்கப்படும் என்றும் கூறினார்.

தொழிற்பயிற்சிகளை பெற்றவர்கள் சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்பினால், முறைசாராக் கல்வி வழிகாட்டல் பிரிவு ஒவ்வொரு மாணவர்களுக்கும் சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்க இலங்கை வங்கி, மக்கள் வங்கியூடாக கடனாக ஐயாயிரம் ரூபாவைபெற்றுக்கொடுக்கும். இத்திட்டத்திற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் எண்பத்தெட்டாம் ஆண்டு பன்னிரெண்டு லட்ச ரூபாவும், எண்பத்தொன்பதாம் ஆண்டு பத்துலட்ச ரூபாவையும் வழங்கவுள்ளது. (12)

## இராசி பலன்

### 15 - 2 - 1990

### வியாழக்கிழமை

ஷஷ்டி காலை 8 ம 35 நி. மி. சித்திரை பகல் 2 ம 52 நி. மி. இராகு காலம் பகல் 2. 03 முதல் 3. 31 வரை. சுபதினமல்ல.

மேடம்:- காரிய பலிதம், பணவரவு, அதிகாரிகள் பாராட்டு, குடும்ப மகிழ்ச்சி, குதூகலம்.

இடபம்:- பிரிந்தவர் கூடுவர், பயணங்களால் நன்மை, விவேகமான செயல், பொதுப் பணி.

மிதுனம்:- ஏமாற்றம், குடும்பகவலை, உறவினர் பகை, தொழில் லாபம், மூத்தோர் உதவி.

கடகம்:- பயனற்ற செயல், அலைச்சல் மிகுதி, சோம்பல், கடன்சுமை, தாமதம்.

சிங்கம்:- எண்ணியது கைகூடும், உல்லாசப் பயணம், காதல் சிறப்பு, குடும்ப நன்மை, சகோதர உதவி.

கன்னி: குழப்பமடைதல், அதிகயோசனை, தொழில் மந்தம், பணக் கஷ்டம், நேசர் நட்பு.

துலாம்:- உற்சாகம், புதிய முயற்சி, அதிகாரிகள் பாராட்டு, ஆலய தரிசனம், புதிய பதவி.

விருச்சிகம்:- வேலைப்பளு, பழைய நினைவுகள், பணச் செலவு ஏமாற்றம், நண்பர் பகை.

தனுசு:- நல்லோர் சினேகம், தொழில் மேன்மை, பழைய உறவு, வாகனச் சிறப்பு.

மகரம்:- பயந்த சுபாவம், பெண் வழித்தொல்லை, கவலை மிகுதி, ஆராய்ச்சி. விவேகம்.

கும்பம்:, கடும்போக்கு, தொழில் பிரச்னை. மனவேதனை தனித்திருத்தல், கண்ணியக் குறைவு.

மீனம்:- வயிற்றில் ரோகம், தொழில் லாபமின்மை, குடும்ப சுமை, புத்திரர் கவலை.

## நீர் வழங்கும் வவுசர்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கம் குடிநீர் வசதியை மேம்படுத்துவதற்காக மூன்று லான்ட்மாஸ்டர் இயந்திரங்களையும் நீர் வழங்கும் வவுசர்களையும் வாகரவத்தை, வேலணை, நெடுந்தீவு மக்களுக்கு வழங்கியுள்ளது. இவை செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளால் வைபவரீதியாக அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மூன்று வாரங்களாக

# யாழ். தபால்நிலைய தொலைபேசி இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மத்திய தபால் அலுவலகத்தில் இயங்கிவந்த 'யாழ்ப்பாணம்—கொழும்பு' தொலைபேசி கடந்த மூன்று வாரங்களாகப் பழுதடைந்த நிலையில் இருப்பதாகத் தெரிய வருகிறது.

இதுபற்றி பண்ணையிலுள்ள தொலைபேசி இலாகாவுக்கு அறிவித்தும் இதுவரை எது வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லையென யாழ். தபால் நிலைய உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

தினமும் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் யாழ். தபால்நிலையத்திற்கு வந்து பெரும் ஏமாற்றத்துடன் திரும்புவதாகவும் அந்த உத்தியோகஸ்தர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். நகரில் இயங்கிவரும் தனியார் தொலைபேசி நிலையங்களில் உள்ள தொலைபேசிகள் மிகவும் சீராக இயங்கிவருவதுடன் மற்றும் கடல் கடந்த நாடுகளுக்கும் இங்கிருந்து எதுவித தடங்கலுமின்றித் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருப்பதாகவும் தெரியவருகிறது. (வி)

## நஷ்டஈடு வழங்கப்படுகிறது

(வடமராட்சி)

இந்திய இராணுவ முகாமிற்கு அண்மையில் குடியிருப்பற்ற வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு வழங்கப் படுகிறது.

வடமராட்சியில் இந்திய இராணுவ முகாம்களின் எல்லைகளில் உள்ள குடியிருப்பற்ற வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடும், முகாமிட்டிருக்கும் வீட்டுச்சொந்தக்காரர்களுக்கு வாடகைப் பணமும் இந்திய இராணுவத்தினரால் அப்பகுதி பிரஜைகள் குழுவின் உதவியுடன் வழங்கப்பட்டு வருகிறது. (51)

## பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

[யாழ்ப்பாணம்]

வடக்கு, கிழக்கில் வேலையற்றிருக்கும் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பளிக்கும் நடவடிக்கைகளை மாகாண அரசு மேற்கொண்டு வருகிறது.

அடுத்த மாத நடுப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 150 பட்டதாரிகளுக்கு முகாமைத்துவ பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது இவ்வாறிருக்க பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கும் பொருட்டு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நிலவும் பட்டதாரி ஆசிரியர் பற்றுக்குறை விபரங்களை பாடங்களின் ரீதியாக திரட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. (து)

## சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சமய அறிவுப் போட்டி, சமயப் பேச்சுப் போட்டிகளை நடாத்துவதற்குக் கோப்பாய் இந்து இளைஞர் மன்றம் முடிவு செய்துள்ளது.

மாணவ, மாணவிகளுக்கிடையே இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்றும் பங்குபற்ற விரும்புவோர் இந்து இளைஞர் மன்றத்திற்கு விண்ணப்பிக்குமாறும் மன்றத் தலைவர் திரு. பொ. விக்கினேஸ்வரலிங்கம் அறிவித்துள்ளார்.

ஆண்டு ஐந்துவரை 'கல்விச் செல்வம்' என்னும் தலைப்பிலும், ஆண்டு ஆறு – ஏழு வரை 'சக்தி வழிபாடு' என்னும் தலைப்பிலும், ஆண்டு எட்டுக்கு மேற்பட்டவர்களுக்குச் 'சுவாமி விவேகானந்தர்' 'சத்தியமே வெல்லும்' ஆகிய தலைப்புக்களிலும் பேச்சுப் போட்டிகள் நடாத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (54)

## ஆலயம் புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையிலுள்ள ஞானவைரவர் ஆலயம் சுமார் இருபதாயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த தைப்பூச தினத்தன்று பாலஸ்தான வைபவம் நடைபெற்று புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் சி. கணேசலிங்கம் இதற்கான அடிக்கல்லை சுபமுகூர்த்தத்தில் நாட்டிவைத்தார்.

## நாய்களுக்கு தடுப்பு ஊசி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதிகளிலுள்ள நாய்களுக்கு விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்துகள் ஏற்றப்பட்டு வருகின்றது.

கடந்த சனிக்கிழமை புங்குடுதீவு கிராம சபை மண்டபத்தியில் வைத்து சுமார் நூறுக்கு மேற்பட்ட நாய்களுக்கு தடுப்பு மருந்து ஏற்றப்பட்டது,

மேலும் இப்பகுதிகளிலுள்ள பெருந்தொகையான கட்டாக்காலி நாய்களை யாழ் மாநகர சபை ஊழியர்கள் பிடித்துச் சென்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது,

## அகதிகளுக்கு 193 வீடுகள்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை பாலம் போட்டாறு என்ற இடத்தில் இலங்கை சுவிசேஷ ஐக்கியத்துவ அபிவிருத்திச்சேவை (வீட்ஸ்) நிறுவனம் 193 வீடுகளை அகதிகளுக்காக அமைத்துள்ளது.

பாலம் போட்டாறு குடியேற்றத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட தமிழ், சிங்கள மக்களுக்கு இவ்வீடுகள் விரைவில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் 1235 வீடுகளைக்கட்டுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இதில் 400 வீடுகள் தற்போது கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. (து)

## பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

அ வழிப் போராட்டக்குழுவினால் நடத்தப்படவுள்ள பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி இம்மாதம் 23-ம் திகதி குழுவின் பணிமனையிலுள்ள காந்தி நினைவு அரங்கில் க. ஜீவகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் பேரா[illegible] சிவத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இப் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (து)

## முத்திரைக்கு தட்டுப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முத்திரைகளுக்குப்பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது ஒரு ரூபா, 75 சதம், 5 ரூபா, 10 ரூபா முத்திரைகளுக்குகே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## அரியாலையில் சிறுவர் பூங்கா

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலையம் கடந்த சனிக்கிழமை ''சிறுவர் பூங்கா'' ஒன்றைத் திறந்துள்ளது.

மேற்படி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள இச் சிறுவர் பூங்காவில் சிறுவர் பொழுது போக்குக்குரிய சகல வசதிகளும் நவீன முறையில் அமைச்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (வி)

## 15 ஆயிரம் ரூபா உதவி

(பண்டத்தரிப்பு)

கிராம அபிவருத்தித் திணைக்களம் மாரீசன்கூடல் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு விசேட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம ரூபாவினை அண்மையில் வழங்கியுள்ளது.

கால்நடை வளாப்புக்காக மேற்படி சங்ச உறுப்பினர்களுக்கு சுழற்சி முறை கடன் அடிப்படையில் இந்தப் பணம் பங்கீடு செய்து வழங்கப்படவிருக்கின்றது.

### உணவு முத்திரைக்கான பணம்

# ப. நோ. கூ. சங்கங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றிற்கு கடந்த டிசம்பர் மாதத்திற்கான உணவு முத்திரைக்கான பணம் இதுவரை யாழ். அரசாங்க செயலகத்தினுல் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனுல் ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான உணவு முத்திரைக்கான பொருட்களை மக்களுக்கு விநியோகிப்பதற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலத்த நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும், உணவு முத்திரைகளை வழங்குவதில் தாமதமாகலாம் என்றும் அறியப்படுகின்றது.

### 'நாவலர் ஐயாவின் பணி

# சைவமும் தமிழும் வளர வழிவகுத்தது'

(மட்டுவில்)

''அன்னியர் ஆட்சிக் காலத்தில் எமது மத்தியிலே நடைபெற்ற மாற்றங்கள் என்பனவற்றினை எதிர்த்து ஸ்ரீலஸ்ரீ நாவலர் ஐயா ஆற்றிய சமயப்பணியும், மொழிப்பணியுமே இன்று நமது மத்தியில் தமிழும், சைவமும் செழித்தோங்க வழிவகுத்தது என்றால் மிகையாகது.''

இவ்வாறு நுணுவில் மேற்கு இந்து இளைஞர் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான அர்ச்சகர் பிரம்மஸ்ரீ வி. சண்முகநாத சர்மா கூறினுர்.

தேவஸ்தான முன்றலில் பரிபாலன சபை செயலாளர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அன்று நாவலர் ஐயா விட்டுச் சென்ற பணியை அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி எமது இந்து இளைஞர் மன்றங்கள் முன்னெடுத்துச்செல்ல வேண்டும். (82)

## நோயாளர்களுக்கு பால்

(வடமராட்சி]

புலோலி அரசினர் ஆதார வைத்தியசாலை நோயாளர்களுக்குத் தற்போது பால் வழங்கப்படுகின்றது.

1988 ஆண்டு மார்ச் மாதம் வரை வழங்கபட்டுவந்த பாலை பால்மாவின்உயர்வினுல் யாழ். மாவட்ட தலைமைச் சுகாதாரத் திணைக்களம் பால் வழங்குதலை இடைநிறுத்தம் செய்தது குறிப்பிடத்தக்கது.

# அடகு நகைகளை மீளளிக்க துரித நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக்கிளைகளில் அடகு வைக்கப்பட்டு இதுவரை மீளளிக்கப்படாத நகைகளை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருகின்றன.

கொழும்பிலுள்ள மக்கள் வங்கி தலைமை அலுவலகம் அரசாங்க உயரதிகாரிகளுடனும், பாதுகாப்பு அதிகாரிகளுடனும் இதுசம்பந்தமான பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்திருக்கிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து உயர் வங்கிஅதிகாரிகளும் கொழும்பு செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். நகரிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் ஊடாக அடகுநகைகளை மீளளிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது முக்கியமாக ஆராயப்படும் என தெரியவருகிறது.

இதேவேளை கடந்த அக்டோபர் மாதம்வரை சுமார் 13 ஆயிரம் தொகுதி அடகு நகைகள் யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு மக்கள் வங்கிக் கிளைகள் ஊடாக அவற்றின் உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டன என மக்கள் வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (பெ)

## கூட்டம்

(கொழும்பு)

மலையக மக்களை எதிர்நோக்கும் பிரச்னைகளை ஆராய்ந்து தீர்வு காண வறக்காப்பொல பாபுல் ஹலேன் மத்திய மகா வித்தியாலயத்தில், இம் மாதம் 17-ம் திகதி பொதுக் கூட்டமொன்று நடைபெறவிருக்கின்றது. இக்கூட்டத்தில் கேகாலை மாவட்ட எம். பி.க்கள், மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

### இந்திய ராணுவத்தினுல்

# 'வீடியோ' கமரு உரியவரிடம் ஒப்படைப்பு

(வடமராட்சி)

இந்திய இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்ட வீடியோக்கமரு நாலு மாதங்களின்பின் மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த நாலு மாதங்களுக்கு முன் வல்லிபுர ஆலயத்தைப் படம் பிடித்த வீடியோக் கமரு இந்திய இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக பருத்தித்துறை பிரஜைகள் குழுவிடம் உரிமையாளர் செய்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து அண்மையில் மேற்படி கமரு பருத்தித்துறை பிரஜைகள் குழுச் செயலாளர்கள் திரு. எஸ். மகேசன், திரு. எஸ். காந்திதாசன் ஆகியோர் முன்னிலையில் பிரிகேடியர் டி. பி. சிங் உடுப்பிட்டி முகாமில் வைத்து உரிமையாளரிடம் ஒப்படைத்தார். (51)

# மக்கள் வங்கியின் கடன் வழங்கும் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழவு, புனர் நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடன் உதவிகளை வழங்க மக்கள் வங்கி நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

காணிப்பதிவாளர் அலுவலகம் யாழ் மாவட்டத்தில் இயங்க ஆரம்பித்ததையடுத்து மேற்படி கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் யாழ் மக்கள் [illegible] சேர்ந்துள்ளன.

பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பதற்காக கடன் கோரி எழுபத்திநான்கு விண்ணப்பங்களும், வர்த்தக ஸ்தாபனங்களைப் புனரமைப்பதற்காக இருபத்திநான்கு விண்ணப்பங்களும் கிடைத்திருப்பதாக மக்கள் வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்களுக்கு கடன் வழங்குவதற்கென மொத்தம் 92 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பதற்காக ஒன்றரை லட்சம் ரூபாவும் வர்த்தக ஸ்தாபனங்களைப் புனரமைப்பதற்காக இரண்டு லட்சம் ரூபாவும் கடனுக வழங்கப்பட உள்ளது. (பெ)

## தையற்பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைக் கிராம இளம் பெண்களுக்குத் தொழிற்துறை ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் கொழும்புத்துறைக் கிராம அபிவிருத்திச் சங்கம் தையற் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. (54)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எமது அமைப்பில் கூடுதலான முஸ்லிம் போராளிகள் உள்ளனர்'- யோகி

(மட்டக்களப்பு)

''எம்மைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் வாழும் பகுதி விகிதாசாரம் தொடர்ந்து பேணப்படும். வேலைவாய்ப்பு, குடியேற்றம், நிலப்பங்கீடு உட்பட சகல விடயத்திலும் இது பேணப்படும். இது சட்ட ரீதியாக வகுக்கப்படும். இது குறித்து முஸ்லிம் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.''

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் (யோகி) ஏறுவூரில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாயற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவித்தததாவது:

தமிழ் – முஸ்லிம் மக்கள் பிரிந்து வாழக்கூடியவர்களல்ல. அவர்கள் இணைந்து வாழவேண்டியவர்கள். இம்மக்களின் சுயநிர்ணய உரிமை பாதுகாப்பு ஆகியவற்றின் சக்தியாக நாம் செயல்படுவோம்.

எமது முன்னணியின் நோக்கம் தேர்தலல்ல மக்கள் எம்முடன் இணைந்து செயபடவேண்டும் என்ற நோக்குடன் ஆவலுடன் உள்ளனர். இதற்காகவே அரசியல் கட்சியாகப் பதிவு செய்துள்ளோம். எமது சுயநிர்ணய உரிமை ஒருமைப்பாடுகளுக்கான போராட்டம் தொடரும்.

விடுதலைப்புலிகள் வேறு, முஸ்லிம்கள் வேறு அல்ல என்பதை சகலரும் புரிந்து கொள்ளவேண்டும். தமிழீழ தாயகம் நம் அனைவருக்கும் சொந்தமானது எமது அமைப்பில் கூடுதலான முஸ்லிம் போராளிகள் உள்ளனர். மேலும் பலர் இணையவேண்டும்.

தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமை சீர்குலையவேண்டும்- இவ்விரு இனங்களும் ஒதுக்கப்படல் வேண்டும் - ஒருபோதும் ஒருமித்த குரல் இருக்கக்கூடாது என்ற இந்தியாவின் திட்டமிட்ட முயற்சியை நாம் முறியடித்துவிட்டோம் என்பதை புரிந்து ஒற்றுமையுடன் செயல்படவேண்டும்.

முஸ்லிம் பகுதி பொறுப்புகளை முஸ்லிம்கள் ஏற்கவேண்டும். இதுதான் போராட்டத்தின் வெற்றியாகும். இதனை நீங்கள் இணைந்து பெற்றுக் கொள்ளவேண்டும். பிரித்துப் பார்த்தல் கூடாது.''

மட்டு.-அம்பாறை பொறுப்பாளர் திரு. கே. கருணா, அரசியல் பொறுப்பாளர் திரு எஸ் கரிகாலன் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

## அமெரிக்க

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வகிக்கின்றது. ஆனால் இன்னும் பத்துவருடகாலத்துக்குள் அது இந்தத்துறையில் முதலாவது இடத்தை எட்டிப் பிடிக்கும் என சர்வதேச பொருளாதார நிபுணர்கள் மதிப்பிட்டிருக்கின்றனர்.

அமெரிக்க சினிமா உலகில் ஜப்பானிய ஆக்கிரமிப்பு இதற்கு முதல் படியாக அமையும் எனவும ஹேஸ்யம் கூறப்பட்டிருக்கிறது. (பெ)

## பண்டத்தரிப்பு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மாதகல் சுடலைக்குச் செல்லும் வீதியைத் திருத்துவதற்கு 90 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது

இந்த வேலைத்திட்டங்களை விரைவில் நிறைவேற்றுவதற்கான ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலக பொறுப்பதிகாரி திருமதி பி. சிவலிங்கம் தெரிவித்தார்.

## திருக்குறள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ளில் ஒன்றே ஒன்றுதான் உள்ளது.

1330 பாக்களையுடைய திருக்குறளிலுள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை தெரியுமா 42194 ஆகும்.

திருக்குறளில் திருவள்ளுவர் அதிகம் பயன்படுத்திய எழுத்து எது தெரியுமா 'ள' ஆகும். இந்த எழுத்து 1705 முறை பயன்படுத்தியுள்ளார்.

திருக்குறளில் ஒரே ஒரு முறை பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் இரண்டாகும். அவை ஞீ, ஙு ஆகும்.

தமிழ் எழுத்துக்களில் 247ல் 37 எழுத்துக்கள் திருக்குறளில் பயன்படுத்தப்படவில்லை அவை ஔ, ஙா, ஙி, ங், ஙு, ஙெ, ஙே, ஙை, ஙொ, ஙௌ, ஞு, ஞூ, ஞை, ஞொ, ஞௌ, டௌ, ணௌ, தௌ, நை, நௌ, பௌ, மௌ, ரௌ, லௌ, வௌ, ழீ, ழு, ழெ, ழே, ழோ, ழௌ, ளோ, ளொ, ளௌ, றௌ, றௌ, னௌ, ஸ்ரீ.

சீவகசிந்தாமணியில் 20 இடங்களிலும், மணிமேகலையில் 69 இடங்களிலும், புறநானூற்றில் 32 இடங்களிலும் சிலப்பதிகாரத்தில் 13 இடங்களிலும், புறப்பொருள் வெண்பாமாலையில் 35 இடங்களிலும், இன்னும் பதிற்றுப் பத்து பத்துப்பாட்டு, வில்லி பாரதம், கந்தபுராணம் ஆகியவற்றிலும் திருக்குறள் கையாளப்பட்டுள்ளது. (12)

# 'தமிழர் ஒரு தேசிய இனமாக வாழ்வதை உலகம் அங்கீகரிக்கவேண்டும்'

(மட்டுவில்)

இலங்கை அரசு இந்திய இராணுவத்தை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் இருந்தது. அதே கொள்கை உள்ள எம்முடன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த விரும்பி முன்வந்தது. நாங்களும் பேச்சுவார்த்தை நடத்தினோம். இது ஒரு அரசியல் சம்பிரதாயம்.

இவ்வாறு சாவகச்சேரி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பொறுப்பாளர் திரு. பி. கே. டாப்பா சாவகச்சேரி நகரசபை ஊழியர்களைச் சந்தித்து உரையாடுகையில் இவ்வாறு கூறினர்.

சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் நகரசபையின் சகல துறை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

திரு. டாப்பா மேலும் பேசுகையில் கூறியதாவது: இந்தியாவினல் எமது சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றுத்தர முடியாது. எமது உரிமைகளை நாமே அரசியல் ரீதியாகவோ அல்லது போராட்ட ரீதியாகவோ பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்கு இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறவேண்டும் என்பதையே நாம் விரும்பினோம். இலங்கை அரசும் இதையே விரும்பியது. அரசியல் சம்பிரதாயத்திற்கிணங்க பேச்சுவார்த்தை நடத்தினோம்.

சிலர் இந்திய இராணுவத்துடன் சேர்ந்து கொண்டு எமது மக்களுக்குப் பல துன்பங்களை செய்துள்ளனர். எமது இயக்கமோ கிராமங்களிலே மக்களோடு மக்களாக இணைந்து வாழ்ந்து வந்தது மக்களே எமக்கு பூரண ஆதரவு தந்து எம்மை வளர்த்தார்கள் என்பதை நாம் என்றும் மறக்க முடியாது.

தமிழர் ஒரு தேசிய இனமாக தலை நிமிர்ந்து வாழ்வதை உலகம் அங்கீகரிக்கவேண்டும். இதுவே எமது தலைவர் பிரபாவின் இலட்சியமும் ஆகும் இதற்கு தமிழ் மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம் அதையே நாம் வேண்டி நிற்கிறோம், (82)

## நிர்வாகிகள்

(மட்டுவில்)

சங்கத்தானை சாரதா சன சமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டுள்...னர்.

தலைவர்:– வி. நாகராஜா, உப தலைவர்; என். ரி. பூபாலசிங்கம், செயலாளர்:- செ. சுப்பிரமணியம், உப செயலாளர்:– என். மகேந்திரன், பொருளாளர்; கே. பாலசுந்தரம், மேலும் 7 நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (82)

0 0 0

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கிழக்கு சர்வோதய சன சமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் திரு. கி தியாகராசா தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருடஉத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

போஷகர் மா. செல்லத்துரை, தலைவர் வே. மாணிக்கம், உப தலைவர் மா. கந்தசாமி, செயலாளர் க. நித்தியரத்தினம், உப செயலாளர் செல்வி க. ஜெயமலர், பொருளாளர் சி. பாலச்சந்திரன், பரிசோதகர் சி, ரவீந்திரன். நிர்வாக உறுப்பினர்களாக நால்வர் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

[பண்டத்தரிப்பு)

வடஇலங்கை ஹோமியோபதி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத்தலைவர் டாக்டர் அ. கிருஷ்ணசாமி தலைமையில் அண்மையில் யாழ். நகரிலுள்ள சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட புதுவருட நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்:- டாக்டர் அ. கிருஷ்ணசாமி, உபதலைவர்கள்:- டாக்டர் ரி.புவிராஜன், டாக்டர் எஸ். மோசஸ், செயலாளர்:- டாக்டர் எம் வேலுப்பிள்ளை, உபசெயலாளர்:- டாக்டர் செல்வி எஸ். ஈஸ்வரமாலா, பொருளாளர்: டாக்டர் எஸ். [illegible] செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பது பேர் தெரிவுசெய்யப் பட்டனர்.

## ஆசிரியர்கள்

# நல்லசமுதாயத்தை உருவாக்கவேண்டும்

(மட்டுவில்)

''ஒழுக்கமும் பண்பாடும் சமயப்பற்றுமுள்ள நல்ல சமுதாயத்தை உருவாக்க ஆசிரியர்கள் அயராது உழைக்க வேண்டும். தமது மாணவர் சரியான பாதையில் செல்வதற்கான வழிகாட்டிகளாக ஆசிரிய உலகம் என்றும் பொறுப்புணர்ச்சியுடன் சேவையாற்றுவதின் மூலமே ஆசிரிய சமுதாயத்தின் புனிதத் தன்மையை மேலும் பிரகாசிக்கச் செய்யமுடியும்''

இவ்வாறு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி துணை அதிபராக இருந்து இளைப்பாறிய ஆசிரியர் பாலரத்தினம் கூறினர்.

துணை அதிபர் பாலரத்தினத்திற்கு சகஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் அளித்த சேவை நலன் பாராட்டுவைபவத்தில் அவர் பதிலுரை வழங்கும்போதே இவ்வாறு கூறினர்.

அதிபர் க. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது: இன்றைய மாணவரே நாளைய தலைவர்கள். அவர்களை நல்ல பிரஜைகளாக்க வேண்டிய பொறுப்பு கூடியவரை ஆசிரிய சமுதாயத்திற்கே உண்டு. இதேவேளை மாணவர்களும் கல்வியைத் தம்மிருகண்மணிகளாகப் பாவித்துக்கற்க வேண்டும். கல்வி ஒன்றே வாழ்க்கையில் உங்களை உயர்த்தி வைக்கும் என்பதை மாணவர் ஒவ்வொருவரும் உணரவேண்டும் என்றார்.

(82)

## நோய் தடுப்பு நடவடிக்கை

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியில் தற்போது வாந்திபேதி நோய் பரவும் நிலை தென்படுவதால், நோய்க்கான காரணிகள் சிறுவர்களுக்கோ, பெரியோருக்கோ தென்பட்டதும், அரசினர் வைத்தியசாலைக்கு வருமாறும் அங்கு வருவோர்க்கு ஏற்ற உதவிகள் செய்துதர தயாராக இருப்பதாகவும் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை டாக்டர் எஸ். பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

## இறக்குமதியாகும்

# இரசாயன பொருட்கள் மீது கட்டுப்பாட்டு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் நச்சு இரசாயனப் பொருள்கள் கட்டுப்படுத்தப்படவுள்ளன.

இலங்கைக்கு இறக்குமதியாகும் இரசாயனப் பொருட்களின் நச்சுத்தாக்கங்கள் குறித்து எவ்வித அக்கறையுமின்றி முறையற்ற விதத்தில் இறக்குமதி செய்யப்படுவதாக மத்திய சூழல் அதிகார சபையினல் அண்மையில் சுட்டிக் காட்டப்பட்டதனைத் தொடர்ந்தே இப்பொருள்களின் இறக்குமதி மீது அரசாங்கம் கட்டுப்பாட்டை விதித்துள்ளது.

ஏனைய நாடுகளில் தடை செய்யப்பட்ட நச்சு இரசாயனப் பொருள்கள் பல இலங்கைக்கு சுதந்திரமாக இறக்குமதி செய்யப்படுவது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

கிருமி நாசினிகள், மருந்துப் பொருட்கள் கைத்தொழில் இரசாயனங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கிய பெருந்தொகையான நச்சு இரசாயனங்கள் இலங்கைக்கு இறக்குமதியாகின்றன.

மத்திய சூழல் அதிகார சபை அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்றில் நானூறிற்கு மேற்பட்ட இரசாயனங்களின் நிரலொன்று வகுக்கப்பட்டது.

இந்த ஆய்வின்மூலம் நூற்றிஇருபதுக்குமேற்பட்டஇரசாயனப் பொருள்களுக்கு பொருத்தமான அடையாளம் எதுவுமில்லை.

மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் எனக்கருதப்படும் இரசாயனப் பொருள்களின் இறக்குமதியினைக் கட் ப்படுத்துவதற்காக தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம். கைத்தொழில், புடவைக் கைத்தொழில்கள் அமைச்சுக்கள், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றினதும் கிருமி நாசினிகள் பதிவாளர், நச்சுக் கட்டுப்பாட்டு நிலைய பணிப்பாளர் ஆகியோரினதும் பிரதிநிதிகள் இக்குழுவில் அடங்குவர். (து)

## கிரிக்கெட்:

## சென். பற்றிக்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேக பூர்வமான கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றிபெற்றது.

இப்போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (வி)

0 0 0

## சென். ஜோன்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், 'ஜொனியஸ்' கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற சிநேக பூர்வமான கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி மொத்தம் 193 ஓட்டங்களையும், 2வது இன்னிங்ஸில் 6 விக்கெட் நஷ்டத்திற்கு 103 ஓட்டங்களையும் பெற்றது.

ஜொனியன்ஸ் கழகம் முதல் இன்னிங்ஸில் 160 ஓட்டங்களையும், 2வது இன்னிங்ஸில் 137 ஓட்டங்களையும் பெற்றது. இப்போட்டி சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. (வி)

## கிளிநொச்சியில் நுண்கலைக் கல்லூரி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சகலவசதிகளும் அடங்கிய நுண்கலைக் கல்லூரி ஒன்று இம்மாதம் 23ம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும்.

கிளிநொச்சி கலாச்சாரப் பேரவை இக்கலைக்கல்லூரியை நிறுவியுள்ளது. இக்கல்லூரியில் இயல், இசை, நாடகத் துறையிலும் எழுத்துத்துறையிலும் பயிற்சிகள் வழங்கப் படுமெனவும் தமிழரின் பாரம்பரிய கலை, விளையாட்டுதுறைகளுக்குப் புத்தூக்கம் அளிக்கப்படுமென்றும் கலாச்சார ஆலோசகரும் கவிஞருமான புதுவை இரத்தினதுரை தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, கலாச்சாரப் பேரவையின் தலைவராக கவிஞர் கே. எஸ். வீரசிங்கமும், செயலாளராக திரு. பி.விவேகானந்தனும் தெரிவாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் திங்கள் முதல் காலை வகுப்புகள் நிறுத்தம்

## மாலை 7 மணிக்குப் பின்னரும் வகுப்புகள் இல்லை

(வடமராட்சி)

வடமராட்சியில் எதிர்வரும் 19-ம் திகதி திங்கள் முதல் சகல தனியார் கல்வி நிலையங்களும் காலை நேர வகுப்புகளை நிறுத்தவும், மாலையில் ஏழு மணிக்கு முன் வகுப்புகளை மூடவும் வல்லையில் நடந்த கருத்தரங்கில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மாணவர்களின் கல்வி சம்பந்தமாக கடந்த செவ்வாய்க்கிழமை வல்வை மகளிர் வித்தியலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் பெற்ரோர், மாணவர் தனியார் கல்விநிலைய நிறுவனங்கள் இம்முடிவினை மேற்கொண்டனர். இதன்பின் நடைபெற்ற கருத்தரங்கிலே விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் திரு தீபன் உரையாற்றுகையில் வடகிழக்கில் உள்ள பாடசாலைகளில் கற்பித்தலுடன் மட்டும் நின்று விடாமல், சாரணீயம், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், புறமுயற்சிகளையும் செய்யக்கூடிய வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

இன்று தமிழ் மக்கள் மத்தியில், பாரம்பரியகலை கலாசாரங்கள் சீரழிந்து கொண்டு போவதையும் பாடசாலைகளில் சாரணீயம், விளையாட்டுப் போட்டிகள் போன்றன அருகி வருவதைக் காணும் பொழுது மனச்சாட்சியுளள எவருமே மனங்கலங்காது இருக்க முடியாது.

1990-ம் ஆண்டு முடிவுக்குள், எமது மாணவர்களின் கல்வியில் ஒருமறு மலர்ச்சி ஏற்படுத்த வேண்டும். இது நிட்சயமாக ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கையுடன் செயல்படவேண்டும்

இக்கலந்துரையாடலில் சகலரினதும் ஒருமித்த வேண்டுகோளின்படி சகல தனியார் கல்வி நிறுவனங்களும் எதிர் வரும் திங்கள் முதல் காலை நேர வகுப்புகளை நிறுத்துவதாகவும் மாலை 7-00 மணியின் பின்னர் தனியார்வகுப்புகள் வைக்கக்கூடாது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

அதேவேளை பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் ஆசிரியர்களும் அதிபர்களும் அதிக கவனமெடுத்து பாடசாலைகளை அதி உன்னத நிலைக்கு உயர்த்த முன்வரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

---

## போராளிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுவிட்ட காரணத்தால் இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன இணக்கத்திற்கு வந்துள்ளது. நாம் அற்ப சலுகைகளுக்காகப் போராடவில்லை. கடந்த பதினன்கு வருடங்களாகத் தமிழ்மக்களின் சுதந்திரத்தை நிலைநாட்டப் போராடிவருகின்ரேம். இந்திய அரசு பிராந்திய நலனில் அக்கறை கொண்டு இங்கு வந்து எம்மை அழிக்க முனைந்தது. எமது போராட்ட வரலாற்றில் நாம் பல்வேறு கட்டங்களைத் தாண்டி இன்று புதிய பரிணமை வளர்ச்சி அடைந்திருக்கின்ரேம் தமிழ்த் தலைவர்கள் தாம் சுதந்திரத்தை நிர்மாணிப்போம் எனக் கூறிச் செய்த துரோகத்தனத்திலும் நாம் போராடி, ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியுள்ளோம். அந்த வரலாற்றில் பல போராளிகள் படிக்கட்டுகளாக உயிர்நீத்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் அஞ்சலிசெய்து வீரவணக்கத்தைத் தெரிவிப்பது தமிழ்ச் சமுதாயத்தின் கடமையாகும்'' எனஞர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகிலுள்ள நினைவுத் தூபியில் கைதடி விபத்தில் இறந்த போராளிகள் லெப் கேர்ணல் பொன்னம்மான், லெப்.கேர்ணல் கேடில்ஸ், சித்தார்த்தன், ரஞ்சன் ஆகியோரின் நிழற்படங்களை ஆசிரியர் விஜயரட்ணம் திரைநீக்கம் செய்துவைத்தார்.

லக்ஷமணஐயர், கிறிஸ்டி, பிரேம்குமார், கிருஷ்ணசாமி ஆகியோரும் அஞ்சலியுரை நிகழ்த்தினர். (12)

---

## கிராம ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி கோவில் முருகப்பெருமான் கிராமஊர்வலம் இன்று நடைபெறவுள்ளது. (12)

---

## ஒற்றுமை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டிற்கு தலைமைதாங்கி உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

இளைஞர் அமைதியின்மை ஜனதிபதி ஆணைக்குழுவினல் சமர்ப்பிக்கப்பட்ட 51 சிபார்சுகள் அரசாங்கத்தினல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவசரகால நிலையைக் கூடிய சீக்கிரம் நீக்கப்போவதாகவும், பாதுகாப்பு நிலைமை ஒழுங்காக இருப்பதால் அவசர கால நிலைமையை நீக்கமுடியும் என்றும் அவர் மேலும் கூறினர்.

இளைஞர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் இளைஞர் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டுப் பாரபட்சமின்றி வேலைவாய்ப்பு வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இன ஒற்றுமையை வளர்க்கும நோக்கருடன் தமிழ் பிள்ளைகளுக்கு சிங்களமும், சிங்கள பிள்ளைகளுக்கு தமிழும் கற்பிக்கப்பட்டு சிறுவயதிலிருந்து எல்லோருக்கும் ஆங்கிலமும் கற்பிக்கப்படும்.

1989-ம் ஆண்டில் நடந்த பயங்கர வாதத்திற்கு காரணமான சமூக அநீதிகளை நீக்குவதற்கு ஒற்றுமையுடன் இணைந்து ஒத்துழைக்கும்படி இம்மாநாட்டில் கலந்து கொண்ட பதினேழு அரசியல் கட்சிகளிடமும் வேண்டுகோள் ஜனதிபதி விடுத்தார். (து)

---

## முல்லைத்தீவு பகுதியில்

# 1425 தமிழ் குடும்பங்கள் மீண்டும் குடியேற்றம்

(முல்லைத்தீவு)

ஐந்து வருடங்களுக்கு முன்னர், ராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து அச்சம் காரணமாகக் குடிபெயர்ந்த 1425 தமிழ்க் குடும்பங்கள் மீண்டும் முல்லைத்தீவுப் பகுதிகளில் குடியேறத் தொடங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு தென் பகுதியில் அமைந்துள்ள கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு, கருநாட்டுக்கேணி. ஆகிய பகுதிகளில் இம்மாதம் 7-ம் தேதி முதல் இவர்கள் குடியேறிவருகின்றனர்.

1984-ம் ஆண்டு டிசம்பர் மாதம் கட்டாயத்தின் பேரில் இவர்கள் இப்பகுதிகளில் இருந்து வெளியேறிஞர்கள்.

புதிதாகக் குடியேறும் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ஆறு நாட்களுக்கு வேண்டிய உணவு வகைகளும், அரிக்கன் லாம்பும் செஞ்சிலுவைச் சங்கத்தினல் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி இடங்களில் தற்போது குடியேறுபவர்களுக்கு தற்காலிக வீடு அமைப்பதற்காக சர்வோதய ஸ்தாபனம் கிடுகு, மரம் தடிகளை வழங்கி வருகிறது:

காடும், பற்றையுமாகக் காட்சியளிக்கும் இவ்விடங்களைச் சுத்திகரிப்பதற்காக ''றெட்பாஞ'' ஸ்தாபனம் கத்தி, மண்வெட்டி, அலவாங்கு கோடரி போன்ற பொருட்களைக் கொடுத்து உதவியுள்ளது. (வி)

---

## விபரத் திரட்டு அனுப்பாதவர்களுக்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வருமான வரித் திணைக்களம் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியிருக்கிறது. கடந்த காலங்களில் விபரத் திரட்டுக்கள் அனுப்பாத வரி செலுத்துநர்களுக்குச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இறுதி அறிவித்தலைத் திணைக்களம் அனுப்பத் தொடங்கியிருக்கிறது.

---

## யாழ்-திருச்சி விமானசேவை நடத்த கோரிக்கை

(சென்னை)

யாழ்ப்பாணம் - திருச்சி விமானசேவையை மீண்டும் ஆரம்பித்துவைக்கும்படி உலக தமிழ் இளைஞர் சம்மேளனத் தலைவர் டாக்டர் ரி. ஜனர்த்தனன் பிரதமர் வி. பி. சிங்கைக் கோரியுள்ளார்.

இராமேஸ்வரம் - தலைமன்ஞர் கப்பல் சேவையையும் மீண்டும் ஆரம்பிக்கும்படியும் அவர் கேட்டுள்ளார்.

---

## நாட்டின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலர் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர் கூறிஞர்.

தமிழர்கள் மட்டுமல்ல, சிங்களவர்களும், முஸ்லிம்களும் இச்சதி முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## இந்தியா அதிர்ச்சி

இது தொடர்பாகக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் திரு. ரஞ்சனின் குற்றச்சாட்டுகள் குறித்து அதிர்ச்சிதெரிவித்துள்ளதுடன இந்தக் குற்றச்சாட்டுக்களில் எதுவித ஆதாரமும் இல்லையென்றும் தெரிவித்துள்ளதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது. (து)

---

## மூதூரிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முதற் கட்டமாக மூதூர்ப் பகுதியில் இருந்த அனைத்து இந்திய முகாம்களும் மூடப்பட்டுள்ளதுடன், படையினரும் முழுமையாக வாபஸ் பெற்றனர்.

தொடர்ந்து படிப்படியாக திருமலையில் இருந்து இந்திய அமைதிப் படையினர் வாபஸ் பெறுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## வடமராட்சியிலிருந்து

# இந்திய ராணுவம் 18ம்திகதி முற்ருக வெளியேறும்

(வடமராட்சி)

வடமராட்சியில் முகாமிட்டிருக்கும் இந்திய இராணுவத்தினர் இம்மாதம் பதினெட்டாம் திகதிக்குள் முற்ருக வெளியேறவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்து இராணுவத்தினர் முற்ருக வெளியேறிவருகின்றனர். வடமாராட்சியில் உள்ள இந்திய இராணுவத்தினர் 18ம் திகதிக்குள் வெளியேறுவர் என இந்திய இராணுவ உயரதிகாரிகள் வடமராட்சிப் பிரஜைகள் குழுக்களிடம் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் இவர்கள் வடமராட்சியிலிருந்து வெளியேறி பலாலி குடியேற்றப்பகுதி வெளியில் முகாமிட உள்ளதாகவும் தெரியவருகிறது.

வடமராட்சியில் இந்திய இராணுவம் முகாமிட்டுள்ள வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு வாடகைப்பணம் செலுத்தப்படுகின்றது.

தற்போது வடமராட்சியில் முகாமிட்டுள்ள இந்திய இராணுவத்தினர் தாங்கள் தங்கியுள்ள வீட்டுச் சொந்தக்காரர் களைப் பிரஜைகள் குழுவினர் மூலம் தொடர்புகொண்டு அவர்களின் வீட்டுக்குரிய வாடகைப் பணத்தினைச் செலுத்தி வருகின்ருர்கள்.

---

## கொழும்பு சென்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு இழுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இதனல் கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்குப் புறப்பட்ட ரயில தாமதமாக பிற்பகல் 4-மணிக்கே யாழ்.ரயில் நிலையம் வந்தடைந்தது.

இன்று வழமைபோல் ரயில் சேவை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (21)

---

## இன்று புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என எதிர்பார்க்கப்படுகிறது

தமிழக முதல்வர் கலைஞர் கருணநிதியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகவே அவர்கள் தமிழகம் செல்ல விருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (பெ)

---

## சிறிமாவோ சுவாமிமலையில் வழிபாடு

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ நேற்றுச் சுவாமிமலைக்குச் சென்று வழிபட்டார்.

தமிழகத்துக்குத் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் திருமதி பண்டாரநாயக்கா திருச்செந்தூர் முருகன் ஆலயத்துக்கும் சென்று வழிபட்டார், (பெ)

---

## அமெரிக்காவுக்கும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவத் தாதியாகப் பணிபுரிந்திருக்க வேண்டும். அத்துடன் ஆங்கில அறிவும் ஜி. சி. ஈ. (சாதரணதரம்) அல்லது என். சி. ஜி. ஈ. பரீட்சையில் ஆங்கிலப்பாடத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருக்க வேண்டும்.

இந்தவருடம் ஜனவரிமாதம் முதலாம் திகதி 45 வயதுக்கு உட்பட்டவராகவும் அரசாங்கத்தில் நிரந்தர மருத்துவத் தாதிகளாக பணிபுரிபவர்களாகவும் விண்ணப்பத்தாரிகள் இருக்க வேண்டும்.

---

## இன்று திருமலையில் நேர்முகப் பரீட்சை

(மானிப்பாய்)

யாழ். செயலகத்திலும், மற்றும் 13 உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் பணிபுரியும் அலுவலக ஊழியர்களுக்கு இன்று திருகோணமலையில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது,

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இவ்வலுவலகங்களில் அமைய அடிப்படையில் பணிபுரியும் சுமார் 54 பேருக்கு நிர்ந்தர நியமனம் வழங்குவதற்காக வடக்குக் கிழக்கு மாகாண சபையின் உள் துறை அமைச்சு இந்த நேர்முகப் பரீட்சையை நடத்துகிறது.

---

## மினி பஸ்களில்

# கூடுதலான பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கு தடை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் சாரதி லைசென்ஸ் இல்லாமல் மினி பஸ் செலுத்தும் சாரதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

இதுபற்றிச் சகல மினி பஸ் சங்கங்களுக்கும் வலியுறுத்தியுள்ளதாகவும், வாகனச் சாரதிகள் இக்கட்டுப்பாட்டை மீறும் பட்சத்தில் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படலாமென வட பிராந்திய மினி பஸ் சேவைச் சங்கத்தினர் தெரிவித்தார்கள்

மினி பஸ் சேவைகள் பற்றி இச்சங்கத்தினர் மேலும் தெரிவித்ததாவது:

மேற்படி சமாசத்தில் மொத்தம் 859 மினி பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன. இவற்றில் வட பிராந்தியத்தில் மட்டும் 402 மினி பஸ்கள் சேவையில் ஈடுபட்டுவருகின்றன. இந்த பஸ்களில் கூடுதலான பிரயாணிகளை ஏற்றுவதற்கோ அல்லது பஸ்களின் மேல் கூரைகளில் பிரயாணிகளை ஏற்றுவதற்கோ தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தரம் குறைந்த பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்திப் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாமெனவும், ஒருவழிப் பாதையின் சட்ட திட்டங்களையும் முக்கியமாக மீருது நடக்கும்படியும் நாம் பஸ் சாரதிகளையும், நடத்துநர்களையும் கேட்டுள்ளோம். (வி)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு மாசி மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81. Eelanadu P. O. Box No. 49. Telegram; Eelanadu. Telephone: 2291,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org